சகல தேவதைகள் வர்ணிப்பு

## அம்மன் உற்பத்தி

என்னும்

# பூசாரிப் பாட்டு



பிரசுரித்தவர் :

**ஆர். ஜி. பதி கம்பெனி**

நெ. 34, வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை- .

காபிரைட்]

[ரூபாய் 1-50

M. ramanathan
485

உ

பராசக்தி துணை

## சகல தேவதைகள் வர்ணிப்பு

என்னும்

## அம்மன் உற்பத்தி

# பூசாரிப் பாட்டு

ம-ா-ா-ஸ்ரீ K. M. நாராயணசாமி முதலியார்
மாணவர் M. தேவராஜ முதலியாரவர்களாலும்,
பூசாரி அ. க. ஷண்முக நாயகர்
மாணவர் ம. சக்திவேல் செட்டியாராலும்
இயற்றப்பட்டது.

பிரசுரித்தவர் :

**ஆர். ஜி. பதி கம்பெனி,**

நெ. 34, வெங்கட்ராமய்யர் தெரு,

(மின்ட் போஸ்ட்)

காபிரைட்] : : [சென்னை-1

பூசாரிகள் கவனிக்க வேண்டிய

# முக்கிய கவனிப்பு

—※—

இந்நூலைப் படிக்கும் பூசாரிகளுக்குத் தெரியப்படுத்துவது என்னவென்றால் புதியதாகச் சில தேவதைகளின் பேரில் பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் அம்மன் ரேணுகை உற்பத்தியும், அங்காளம்மன் உற்பத்தியும், மதுரை வீரசுவாமி உற்பத்தியும், காத்தவராய சுவாமி உற்பத்தியும் சுருக்கமாகவும், ஒரே பாட்டில் உற்பத்தி சொல்லக்கூடிய கருத்துக்களைச் சேர்க்கப்பட்டு இருக்கின்றன. முதலில் அச்சிட்ட புத்தகத்தைவிட பல தேவதைகளின் பேரில் அலங்காரப் பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இப் புத்தகத்தை ஒருமுறை நீங்கள் பார்வையிட்டால் தெரியவரும்.

இப்படிக்கு,

ஆர். ஜி. பதி.


கீழ்க்கண்ட எமக்கு உரிமையுள்ள நூலையும் வெளியிட்டிருக்கிறோம்.

## மதுரை வீரசுவாமி உற்பத்தி

# பூசாரிப் பாட்டு

விலை ரூ. 2-00

எமது விலாசம்:—

ஆர். ஜி. பதி கம்பெனி,
34, வெங்கட்ராமய்யர் தெரு,
மின்ட் போஸ்ட், சென்னை - 600001.

உ

பராசக்தி துணை

# பூசாரிப் பாட்டு

முக்கியமாய்ச் செய்யவேண்டிய முறைகள்

1 முதல் பதிவிளக்காவது அல்லது அம்மன் உருவாவது சிங்காரித்து வைத்துவிடவேண்டும்.

2 பூஜாரிகள் உடுக்கையை கையில்வைத்து ஏந்துமுன் குருவை தொழுதுவிட்டு பிறகு கீழ் குறித்துள்ள விருத்தத்தை ஆரம்பிக்கவேண்டும்.

3 பம்பை தட்டுவோரும், சிலம்புக்காரர்களும், ஷை பூசாரிகளுக்குக் குறித்துள்ளபிரகாரம், நீங்களும் அவருடன் வணங்கவேண்டும்.

4 விளக்கு முகமாய் பூசாரிகள் திரும்பிக்கொண்டு கீழ் குறித்துள்ள விருத்தத்தின் ஒரு அடியை பாடி விட்டதும் அதன் அடியில் கொடுத்துள்ள (ஆ) என்னும் சப்தத்தை பம்பைக்காரர்களும் சிலம்புக்காரர்களும், சொல்லவேண்டியது அவசியம்.

முக்கிய கவனிப்பு

1 பூசாரிகள் கவனிக்கவேண்டிய தென்னவென்றால், கீழ் குறித்துள்ள விருத்தத்தில் ஒரு அடி பாடிவிடும் தருவாயில், உடுக்கையை மெதுவாய் ஒரு தட்டு தட்டவேண்டும் சிலம்பை அசைக்கவேண்டும்.

2 ஒவ்வொரு அடிக்குக் கீழ் குறித்துள்ள பிரகாரம் பூசாரிகளும், பம்பைக்காரர்களும், சிலம்புக்காரர்களும் விருத்தம் முடிவாகும்வரையில் நான் தெரிவித்த பிரகாரம் அவசியம் நடக்கவேண்டும்.

விநாயகர் விருத்தம்

[பூ] ஓம் கணபதி மஹா கணபதி
திரிலோக வசியசங்கரா

## பூசாரிப் பாட்டு

மனதிலும் நாவிலும் நினைக்க
சிவாயா வென்னும்
எங்கள் மகா கணபதியே
நீ வந்தமரும் வேளையிங்கே
[ப] அய்யா வந்தமரும் வேளையாமே
எங்கள் மகா கணபதியே.

## முக்கிய கவனிப்பு

பூசாரிகள் பாடும்போது பம்பை, உடுக்கை, சிலம்பையும் மெதுவாய் தட்டவேண்டும், உடுக்கை, பம்பைக்காரர்கள் எடுத்துப் பாடும்போது, மேற்படி குறித்துள்ள ஆயுதங்களை முடுக்குடன் ஜோராய் வாசிக்கவேண்டும்.

## கணேசர் மீதில் பாட்டு

[பூ] சாலையிலே என் அய்யா கண் வளர்த்த
சப்பாணி என் அய்யா பிள்ளையாரே
கயமுகனை என் அய்யா கருவறுத்த
கணபதியே என் அய்யா வாருமையா
பானைவயிர் என் அய்யா தான் குலுங்க
பாரத்தும்பி என் அய்யா முன்னசைய
வீரமுடன் என் அய்யா கொம்பொடித்து
வியாசருக்கு என் அய்யா பாரதமும்
எழுதிதந்த என் அய்யா விக்கினரே
எழுந்தருளும் என் அய்யா தீபமதில்
காமாக்ஷி என் அய்யா கைவிளக்கில்
கணபதியே என் அய்யா முன்னமரும்

[பாட்டு முடிவு]

## விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை :—

சாளிகவாகனத்தில் என் ஐயா கணபதியே
சல்தி பயணமிட்டு

---

[பூ] என்பது பூசாரிகள்
[ப] என்பது பம்பைக்காரர்கள்.

வந்தேன் மகனே என்ருல் என் ஐயா கணபதியே
வாரிசரம் பொழியே
இன்னும் ஆரார் வரும்வேளை என் ஐயா கணபதியே
ஆயியுட தீபமதில்

[ப] (இன்னும் ஆரார் வரும்வேளை) முடிவு

கடவுள் பேரில் விருத்தம்

[பூ] ஓம் அரகரா ஓலிங்கா நமசிவாயம்
பக்திபார்வதா பரமகுருவே நமசிவாயம்
சிற்றம்பலநாதர் சிவன்குருவே நமசிவாயம்
பொன்னம்பலநாதா பொற்குருவே நமசிவாயம்
ஆண்முடி பெண்முடி அறுபத்தோருயிரம்
கொடிமுடிகையில் கண்வளர்த்த ஆதி
மன்ஞதலிங்கா
ஆலகாலவிஷத்தையும் அள்ளியே அமுதுண்ட
ஈசனே அரகரா மயேசனே பரமகுரு
வாசனே அடி அண்ணுமலை யீசனே வா

[ப] ஹர ஹர, ஓம் ஓம்,

சரஸ்வதி பேரில் பாட்டு ஙையாண்டி

[பூ] வாணிகலைவாணியம்மா வாழ்மறையோன் தேவியம்மா
சத்திகலை வாணியம்மா சதுர்முகஞர் பாரியம்மா
அரஞருட நாவிலம்மா அரநெல்லிக்காயாஞள்
ஈச்சங்குருத்திலம்மா எழுதிஞளாம் பஞ்சாங்கம்
காழுங்குருத்திலம்மா தனித்தாளாம் சுருளோலை
ஏழூரு காளியர்க்கு எழுதிவாராள் தூதோலை
பத்தூருக்காளியர்க்கு பகர்ந்துவாராள் தூதோலை
ஆளனுக்கு அண்ணரதம் [illegible] அருங்கிளிக்கு அக்கினிதேர்

விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை:—

எழுதுமுன் எழுத்தாஞய் எழுந்தாயா தீபமதில் என் தாயார் கலைமகளே
தாமரை மலரைவிட்டு தாண்டவ மாடுமம்மா என் தாயார் கலைமகளே

வந்தேன் மகனே என்று   என் தாயார் கலைமகளே
வரம் தந்து ஆளுமம்மா
இன்னும் யாரார்வரும்வேளை   என் தாயார் கலைமகளே
இந்தக் காமாக்ஷி தீபமதில்
[ப] (இன்னும் யாரார் வரும்வேளை)

## முருகர் அழைப்புப் பாட்டு

ஆறெழுத்து முருகய்யா   ஆறுமுகம்
அறுகோணம் முருகய்யா   ஒருடல்தான்
சரவணையில் முருகைய்யா   பிறந்ததினால்
சரவணராய் முருகையா   முன்னமர்ந்தீர்
கற்பூர முருகைய்யா   காவடியைக்
கதிர்காமம் முருகையா   ஏந்திவர
இடும்பர் நல்ல முருகையா   கடம்பருமாய்
இருபுறமாய் முருகையா   சூழ்ந்துவர
மான்பிறப்போ முருகையா   வள்ளியம்மை
மயில்பிறப்போ முருகையா   தெய்வயானை
வள்ளிநல்ல முருகையா   வலதுபுறம்
தெய்வயானை முருகைய்யா   இடதுபுறம்
இதுநடுவே முருகையா   கானமயில்
இருந்துநல்ல முருகையா   ஆடிவர

## விளக்கின அழைப்பு

[பூ] வசன நடை:—

கோடி ஜனம் கையெடுக்க   என் ஐயா வேல்குமரா
குடவிளக்கில் வந்ததுண்டா
காவிக்கொடியாடாதா   என் ஐயா சண்முகனே
கன்னுனுட தீபமதில்
அமரய்யா புண்ணியனே   என் ஐயா வடிவேலா
அழைக்கின்றேன் தேவரெல்லாம்
ஆரார் வரும்வேளை   என் ஐயா கதிர்வேலா
ஆயியுட தீபமதில்

[ப] ஆரார் வரும்வேளை

## மதுரைவீர சுவாமிபேரில் விருத்தம்

[பூ] வள்ளியொரு பொம்மியாய் வந்திருந்தாளங்கு
வகையுடன் பொம்மணர்க்கு
வாஞ்சையாய் தெய்வயானை வெள்ளையம்மையாக
வாட்டமாய் தான்வுதித்தாள்
விரைவுடன் கானமயில் தொட்டியன் காரிக்கு
விருப்பமாய்ப் பிறந்திருக்க
வீரிட்டிறைஞ்சிடும் அலங்கார நாகனும்
வீரருடன் நாயுமாக
வெண்மையாய் துலங்கிட அவதாரம் செய்துமே
வெட்டரிவாள் கையிலேந்தி
வேதாந்தி நாதாந்தி மீனாக்ஷி சொக்கருட
வேலையாய் மதுரைவந்து
வைகை கரை வாராமல் சண்டாளக் கள்ளர்களை
வைராக்கியமாய் அறுத்து
ஒதுங்கியே ஜோனகரை வெட்டியே ரதத்தின்முன்
ஒருவரையும் அண்டாமலே
வோட்டியே தாயார் மீனாள் மகிழ்ந்திட
வோசையுடன் கொக்கரித்து
லௌகீகமாகச் சகல வரம்வாங்கியே
இவ்வுலகு தெய்வமாகி
அன்பர்முடி மீதினில் அனுதினமும் விளையாட
அணிமதுரை வீரதுரையே

[ப] அன்பர்முடி மீதினில்

## விருத்தம்

[பூ] கள்ளர் குலவைதியாய் கண்ணிவனம் தழைத்திட
கம்பத்தடி காக்கும் வீரர்
கம்பளத்தார்களைக் கருவோறுத்திட
கதறியே நின்ற வீரர்
கண்ணினுடன் தங்கவொளி நவரத்ன முடிபூண்டு
கண்ஞாடி வுருவான வீரர்
கணகணன ஜெகஜெக நடனமிடும் வாசியில்
கருணையொளி யான வீரர்

கன்னியாம் வெள்ளையொடு பொம்மியிரு மங்கையர்கள்
கழலிணை துதிக்கும் வீரர்
கல்நெஞ்ச வஞ்சக பஞ்சமா பாதகரை
கனலிட்டெரிக்கும் வீரர்
கருத்தினில் நினைத்திடும் உத்தமர் மனைவாழ
கண்திறந்தருளும் வீரர்
ககன மாதர்களும் மலர்மாரி பொய்யவே
கவனம் வைத்தென்முன் வரவே

[ப] அரகரா, ஓம் ஓம்.

இரட்டைசீர் ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] ஆலவாய் சொக்கலிங்கம் மதுரை பாண்டியா
அம்பிகையாள் மீனும்பாள் முத்து பாண்டியா
சோலைவாழ் சொக்கலிங்கம் மதுரை பாண்டியா
சுந்தரியாள் மீனும்பாள் முத்து பாண்டியா
மீனும்பாள் கோவிலண்டை மதுரை பாண்டியா
மின்மேடை கார்த்தவரே முத்து பாண்டியா
காமாக்ஷி கோவிலண்டை மதுரை பாண்டியா
கம்பத்தடி கார்த்தவரே முத்து பாண்டியா
பலிபீடம் விட்டல்லவா மதுரை பாண்டியா
பாண்டியரே வாருமையா முத்து பாண்டியா

[ப] பலிபீடம் விட்டல்லவா

மாயிபருனியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] அஸ்வமுதுகூர்ந்து ஆனந்தமே
ஆணிமுத்து வாருமையா ,,
காரிமுது கூர்ந்து ,,
கடவுள் துணை வாருமையா ,,
மங்கை பொம்மி தன்னுடனே ,,
மதுரை பழனமிடும் ,,
வெட்டரிவாள் தோளிலிட்டு ,,
வெளிப்படய்யா வீரமுத்து ,,

## விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை:—

அண்டை பொம்மி வெள்ளையுடன் என் சுவாமி
அரும்விளக்கில் கொஞ்சுமய்யா
கொண்டைமுத்து தான் குலுங்க என் சுவாமி
கொஞ்சுமய்யா தீபமதில்
ஆரார் வரும்வேளை என் வீரமுத்து சுவாமி
ஆயியுட தீபமதில்

[பூ] ஆரார் வரும்வேளை

## ஏழுமலையான் பேரில் பாட்டு

[பூ] நையாண்டி

கோணவலையானே ராமராமா
கோவிந்தா வாருமையா பட்டாபிராமா
நாமம் மணக்குமலை ராமராமா
நானூற்ருராண்டமலை பட்டாபிராமா
துளசி மணக்குமலை ராமராமா
துவாரகையர் ஆண்டமலை பட்டாபிராமா
தள்ளாக் கிழவரெல்லாம் உன்மலைமேலே
தடிஊணி ஏறுமலை பொன்மலைமேலே
மொண்டி முடங்களெல்லாம் உன்மலைமேலே
மண்டியிட்டு ஏறுமலை பொன்மலைமேலே
நட்டாற்றுக் கம்பமானர் ஓரங்கநாதா
நரசிங்க ரூபமானர் ஸ்ரீரங்கநாதா
உலகத்தை ஓரடியாய் அளந்த பெருமாளே
ஒன்ருக ரூபம் தரித்த பெருமாளே
நன்ருக நாமம் தரித்த பெருமாளே
நாகத்தின் மேல்பள்ளி கொண்ட பெருமாளே

## விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை:—

அலமேலு மங்கையுடன் என் ஐயா கோவிந்தா
அரிராமா வந்தமரும்
சீதை குறத்தியுடன் ஏழுமலையானே
ஸ்ரீராமா வந்தமரும்

காமாக்ஷி தீபமதில் என் ஐயா மலையானே
கண்ணபிரான் முன்னமரும்
ஆரார் வரும்வேளை என் ஐயா மலையானே
ஆயியுட காவலிலே
[ப] ஆரார் வரும்வேளை

கிராம தேவியின் விருத்தம்

[பூ] பலதெய்வ ரூபமாய் பரவொளிச் சத்தியாய்
பக்ஷமாய் எத்திசையுலும்
பாரினில் பாம்பாகி ஏரிலும் வயலிலும்
பார்வதி கோவில் கொண்டு
பிரியமாய் அங்கங்கு கிராமத்தில் தேவியென
பின்புறம் பூதம்சூழ
புதுமைமிக காட்டியே வேணபூஜை கொள்ளும்
புனிதவதி பார்வதியும் நீ
பூ மிக சொறிந்திட காப்புமிக கட்டியே
பூமியில் பொங்கலிட்டு
பெருமையாய்ப் பத்துநாள் உற்சவம் கொண்டாடி
பெருமனதுடன் தொழுகுவார்
பேரிகையுடன் தாரை பறை கொட்டி ஆமை பலி
பேறுலகில் வாங்கிடும்
பைரவ மணிதாயே நீயே கதியென
பைரவி கௌரி கார்ப்பாய்
பொங்கலும் மாவிளக்கும் மாவுடன் கூழுகள்
பொருந்திட தான் படைப்பார்
போக்கிரி அண்ணன்மார் கூட்டம்படை சேனையுடன்
போர்வீரர் சூழ வருவாய்
பௌதீகமாய் உலகில் துதிசெய்யும் மக்களை
பிரியமாய் ஆளும் தாயே தாயே
[ப] பிரியமாய் ஆளும்

---

பிரியமாய் என்ற இடத்தில் அந்தந்தவூர் கிராமதேவி பேரை வைத்து பாடவும்.

கிராமதேவியின் பேரில் சமயநடை

[பூ] ஊர்க்காக்கும் என் னம்மா — காளியம்மா
உத்தமியே என் தாயே — கிராமவல்லி
நாடுகார்க்கும் என் னம்மா — காளியம்மா
நாதாந்தி என் தாயே — கிராமவல்லி
அடியளந்து என் னம்மா — எல்லைகட்டி
அண்ணரெல்லாம் என் தாயே — காவலிட்டால்
மண்ணளந்து என் னம்மா — எல்லைகட்டி
மன்னரெல்லாம் என் தாயே — காவலிட்டால்
உன் உத்திரவு என் னம்மா — இல்லாத
உள் நுழையார் தாயே — தேவரில்லை
மன்னுப்பு என் தாயே — இல்லாத
மனை நுழையார் இங்கே — தேவரில்லை
கட்டவந்த என் தாயே — ஏமனுக்கு
கயிற்பாசத்தை என் னம்மா — கைகொடுப்பாள்
பிடிக்க வந்த தாயே — ஏமனுக்கு
பின்பாசத்தை அம்மா — கைகொடுப்பாள்
பாம்பேரா என் தாயே — மண்டபமாம்
பத்துநிலை என் னம்மா — கோபுரமாம்
எறும் பேரா என் தாயே — மண்டபமாம்
ஏழுநிலை என் னம்மா — கோபுரமாம்
எட்டு நாலு என் தாயே — கொட்டியம்மா
எடுத்து பறை என் னம்மா — சாற்றிவர
[ப] ஆமாம் ஆமாம்

மாயி மருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] பத்து நாள் கொட்டியம்மா — ஆனந்தமே
பரகாப்பு நாட்டமிட்டார் ,,
ஊர்கூடி பொங்கலிட ,,
உத்தமியாள் தேரேற ,,
நாடுகூடி பொங்கலிட ,,
நாதாந்தி தேரேற ,,
ஆடுவெட்டி தாரைஊத ,,
அறுத்ததலை கொக்கரிக்க ,,

கோழிவெட்டி தாரைஹூத ஆனந்தமே
குமரமக்கள் கொக்கரிக்க ,,
ஆமை பலிவோட ,,
புதிரபலி முன்னடக்க ,,
ரத்தபலி முன்னோட ,,
ரணவீரர் பின்தொடர ,,
போட்ச சட்டம் வாங்காத ,,
போக்கிரிமார் உங்களண்ணர் ,,
இட்ட சட்டம் வாங்காத ,,
இடிமன்னர் உங்களண்ணர் ,,
தங்க தடிக்காரர் ,,
தனிமுனிவுங்களண்ணர் ,,
வெள்ளி தடிக்காரர் ,,
வேன லக்ஷம் கிங்கிலியர் ,,
[ப] தாயே, தாயே

கண்சிவந்து கோபித்தாளாம் அம்மன்—என்ற மெட்டு

[பூ] ஆனைபடை சேனையுடன் அம்மன்
ஆத்தாளும் பழனமானாள் இங்கே
கூட்டம் படை சேனையுடன் அம்மன்
குருபரியாள் பழனமானாள் இங்கே
தண்டு நல்ல தளத்துடனே அம்மன்
தவமழகி பழனமானாள் இங்கே
சூலத்தைக் கைபிடித்தாள் அம்மன்
சூட்க்ஷதாரி பழனமானாள் இங்கே
நாகன் வடிவெடுத்தாள் அம்மன்
நாதாந்தி பழனமானாள் இங்கே
பாம்பாக உருவெடுத்தாள் அம்மன்
பார்வதியாள் பழனமானாள் இங்கே
கடுகசிங்கம் முதுகூர்ந்தாள் அம்மன்
கண்மூன்று வுடையவரும் இங்கே
சிங்கநல்ல வாகனத்தில் அம்மன்
சிறப்புடனே பழனமானாள் இங்கே
வேப்பிலை கைபிடித்தாள் அம்மன்
வேதாந்தி பழனமாவாள் இங்கே

பச்சிலையை விசிரியல்லோ — அம்மன்
பட்க்ஷம் வைத்துப் பழனமாளுள் — இங்கே
கட்டுபிரம்பெடுத்தாள் — அம்மன்
கைநிறைய வேம்பெடுத்தாள் — இங்கே
[ப] ஆமாம் ஆமாம்

மாயிமருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] கொத்து பிரம்பெடுத்தாள் — ஆனந்தமே
கூசாத வேம்பெடுத்தாள் ,,
பச்சிலைக் காரியம்மாள் ,,
பட்த்தாலழகி யம்மாள் ,,
பகல் பார்த்தாள் பார்வதியாள் ,,
இரவு பார்த்தாள் ராக்ஷதியாள் ,,
கோழிமுட்டை கண்ணழகும் ,,
கோடாலி பல்லழகும் ,,
செம்பட்டை மயிரழகும் ,,
செவுந்த முகமழகும் ,,
பம்பட்டை மயிரழகும் ,,
படர்ந்த முகமழகும் ,,
குளிர்ந்த முகமுடனே ,,
குருபரியாள் வாராளே ,,
எல்லாம் அறிந்தவளே ,,
ஏகபராபரியே அம்மா ,,
உள்ளம் அறிந்தவளே ,,
உலகளந்தோன் தங்கையம்மா ,,
மாயனுக்கு ஆசை தங்கை ,,
மாதுமையே வாருமம்மா ,,
வரம்கொடுத்து காருமம்மா ,,
வந்தமரும் காவலிலே ,,
[ப] தேவதா தேவதா ,,

கிராமதேவி அழைப்புப் பாட்டு

[பூ] அடியளந்து என்தாயே — எல்லைக்கட்டி
அண்ணரெல்லாம் — ஏகவல்லி — காவலிட்டாள்
தெற்களந்து என்தாயே — எல்லைக்கட்டி
தேவரெல்லாம் — ஏகவல்லி — காவலிட்டாள்

ஊர் கூடி என் தாயே பொங்கலிட
உத்தமியாள் ஏகவல்லி முன்னடக்க
நாடு கூடி என் தாயே பொங்கலிட
நாயகியாள் என் தாயே ரதமேற
ஆடுவெட்டி என் தாயே தாரைஊத
அறுத்ததலே ஏகவல்லி கொக்கரிக்க
கோழிவெட்டி என் தாயே தாரைஊத
குமரமக்கள் ஏகவல்லி கொக்கரிக்க
ஊமை நல்ல தாயே பலியோட
உதிரபலி ஏகவல்லி முன்னடக்க
அண்ணரெழுவருடன் தாயே
அதிகாரி என்னம்மா வாங்களம்மா
இக்கரைக்கு என் தாயே ஏகவல்லி
அக்கரைக்கு என் தாயே சேணியம்மா
இருவர் நல்ல என் தாயே வரங்களம்மா
தண்டு நல்ல தாயே தளத்துடனே
தவமழகி கிராமவல்லி வாங்களம்மா

[ப] தண்டு நல்ல தாயே

## விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை :—

நீ தானு ஏகவல்லி என் தாய் மனோன் மணியே
நீலிநடனம் கொள்ளே
வ தேன் மகனே யென்று கண்ணுன் விளக்கில்
வாரிச்சரம் குலுக்கே
தொம்பரப் பெண்ணதுபோல் கிராமவல்லிதாயே
துவண்டாடும் தீபமதில்
எவரார் வரும்வேளே என் தாய் அதிகாரி
ஏகவல்லி தீபமதில்

[ப] எவரார் வரும்வேளே

## அம்மன் பேரில் விருத்தம்

[பூ] திருமருகு தாழனூர் ராமனுதபுரம்
தீர்த்தகழி பூவநகரமாம்

செஞ்சிமா மலையனூர் தீவப்பிரட்டனூர்
சிக்கனம்பாக்கம் மிக்கியதோர்
எருமை வெட்டும் பாளையமாம்
ராயபுரம் இனியினிய
ஸ்தலங்களெல்லாம்
இருந்து விளை யாடிவரும்
குருமணி யிழைத்திலங்கு சிங்காதனத்திலமர்ந்த
சிவன்படைச்சி லாடச்சிபேச்சி
அதிமதல பாவாட தேசிசன் பவனிவருவாள்
எங்கள் அங்கம்மா ரேணுகையே
இந்த அடுமைகாவல் வந்துநில்லு
[ப[ அடுமைகாவல் வந்துநில்லு
எங்கள் பேரான் மாரிமுத்தே

துரோபதை அம்மன் விருத்தம்

[பூ] அன்றொரு காலமதில் அரனுடைய பாகத்தில்
அமர்ந்தர் ரிந்திர சேனையாய்
அதற்குப்பின் நளாயினி தேவியாய் வந்துபின்
அருணை தான் மறைத்தாய்
அடங்காத துரியனை வதைத்திட துரௌபதையாய்
அவதாரம் செய்து புவியில்
அந்தமிகு துவாபரயுகமதில் பாஞ்சாலன்
அனல்யாகமதில் பெண்பிறந்தாய்
அமர்ந்திட காமுடன் சப்த ஓங்காரியாய்
அழகுடன் சூலமேந்தி
அருவை வுருவாகியே தர்மருடன் நால்வரை
அஞ்சாமல் மணம் புரிந்து
அண்ணனும் மாயருட வுதவியால் வனம்ஆண்டு
அடங்காத சேனை கொன்று
அதிகசந்தோஷமாய் பழைபடி நாடாண்ட
அம்மை சத்தி துரோபதை யம்மையே
[ப] அதிக சந்தோஷமாய்

சமய நடை

[பூ] செஞ்சி நல்ல தாயே பதியாளே
செல்வதியே தாயே துரௌபதையே

பாஞ்சாலன் செய்தவத்தில்
பார்வதி தாயே பெண் பிறந்தாய்
யாகத்திலே தாயே தானுதித்து
யோகத்திலே தாயே பெரியவளே
பண்டார தாயே பெட்டி தன்னில்
செண்டாடும் தாயே துரௌபதையே
குந்தியம்மன் தாயே மருமகளே
குமரியரே என் தாயே சத்தியம்மா
அண்டாத என் அம்மா நெருப்பேயம்மா
ஆர்க்கடங்கா என் தாயே துரௌபதையே
தீண்டாத என் தாயே பெரும்நெருப்பே
திரிபுரத்தை என் அம்மா எரித்தவளே
முக்கண்ணில் தாயே தானெருத்தி
முச்சுடரே என் அம்மா துரௌபதையே
துரியனை என் தாயே தானடக்க
துலங்கினாய் என் அம்மா துரௌபதையே
கீசகனை தான் வதைக்க அம்மன்
கிளிமொழியே தாயே பெண் பிறந்தாய்
சங்கரிக்க என் தாயே வந்துதித்த
சமர்த்துள்ள என் அம்மா துரௌபதையே

[ப] ஆமாம் ஆமாம்

மாயி மருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] வில் வளைத்து மாலையிட்டார் ஆனந்தமே
விஜயனம்மா அர்ச்சுனனும் ,,
கணை தொடுத்து மாலையிட்டார் ,,
கணவரம்மா அர்ச்சுனனும் ,,
பஞ்சவரும் வுன்னாலேதான் ,,
பாரதமும் வுன்னாலேதான் ,,
துரியனை துடைகிழித்தாய் ,,
துலைத்தாயே கீசகனை ,,
மாயனுட தங்கையம்மா ,,
மாதாவே துரௌபதை ,,
ஆட்டுத் தலைக்காக ,,
ஆயனுடன் வாது செய்த ,,

போத்தராஜன் தன்னுடனே ஆனந்தமே
போர்வீரி வாங்களம்மா ,,
ஐவர் பஞ்சபாண்டவர்க்கு ,,
அழியாத துரௌபதையே ,,
பஞ்சவர்க்கு தானழியா ,,
பராசக்தி துரௌபதையே ,,
சிங்க வாகனமேறி ,,
சிறப்புடனே வாங்களம்மா ,,
காருமம்மா பெற்றவளே ,,
காரணியே துரௌபதம்மாள் ,,

[ப] தேவதா, தேவதா.

## வண்ணாரப்பேட்டை உள்ளாறு அம்மன் விருத்தம்

[பூ] ஆராறும் ஒன்ருகி உள்ளாறு சமயமாய்
ஆதிசக்தி யானவளும் நீ
ஆகமபுராண இதிகாச வுரைகாணுத
ஆனந்த உள்ளாறும் நீ
ஆச்சரியமாகவே உச்சிவெளி ஒளிதனில்
ஆடும் வுள்ளாறும் நீயே
ஆவலாய் உனைபோற்ற வண்ணாரபேடுவாழ்
ஆத்தாள் வுள்ளாறு வுடையே
கலிமீதில் வுனை நாடி வுள்ளாறு காரென்று
கரகத்தை யேந்தி வருவார்
கண் மூன்றுடையதோர் தேங்கனி வுருட்டியே
கழலினை தெண்டனிடுவார்
கண்டவர்கள் பூசையிட கனவிலும் நினைவிலும்
கதறிட சூலமேந்தி
கருத்தறியாததோர் மானிட மக்களை
கடுகி அழை வுள்ளாறு அம்மையே

[ப] சத்தியுமை பார்வதியே, சரணம் சரணமம்மா

## கருப்பண்ண சுவாமிமீதில் சமயநடை பாட்டு

[பூ] அழகர்மலை சுவாமி வாசலிலே
அமர்ந்துவாழும் சுவாமி கருப்பையனே
பழமுதிர் சுவாமி சோலையிலே
பதியமர்ந்த சுவாமி கருப்பையனே

3

பதினெட்டாம் சுவாமி கருப்பையனே
பகவான் சுவாமி எழுந்திரய்யா
வேலெடுத்து சுவாமி தோளிலிட்டு
வெளிப்படய்யா சுவாமி காவலிலே
வெள்ளைப் புரவியேறி சுவாமி
வெளிப்படய்யா கருப்பையரே
சந்தனப்பூ மேடை விட்டு
சுவாமிநல்ல கருப்பையா வாருமையா
அஞ்சனத்தில் சுவாமி வல்லவரே
அழகுள்ள தேவா கருப்பையரே
நாகப்பழத்திலேயும் சுவாமி
நல்ல கறுப்பழகர்
கோவைப் பழத்திலேயும் சுவாமி
கொஞ்சம் கறுப்பழகர்

[ப] கோவைப் பழத்திலேயும்

[பூ] வசன நடை :—

அழகர் மலையானே என் சுவாமி கருப்பண்ண
அடுமை காவல் வந்து நில்லு
வெள்ளைப் புரவியேறி என் சுவாமி துரையே
விளையாடும் தீபமதில்
அஞ்சனத்தில் சுவாமி கொஞ்சிவிளையாடும்
கொக்கரிக்கும் குலதெய்வமே
வந்தேண்டாப் பயலே என்னும் கருப்பைய சுவாமி

[ப] வந்தேண்டாப் பயலே என்னும் கருப்பையசுவாமி
வரம் கொடுக்கும் தெய்வமானீர்

பச்சையம்மன்பேரில் விருத்தம்

[பூ] கர்த்தன் விழிமுடி நீ கதிர்மதி யிருண்டிட
கடும்சாபம் பெற்றவளும் நீ
கணவரில்லாமலே தனியாக காசியில்
கரத்திலரம் வளர்த்தவளும் நீ

கதறியே வந்ததோர் மகிடனை வென்றமே
கயிலைபதி சேர்ந்தவளும் நீ
கண்ணுடன் வுதவியால் முனிவர்கள் யெழுவருடன்
கலிமீதில் பூசைபெற்று
கனவொளி வாழைநகர் திருமுல்லைவாயல் வாழ்
கன்னிப் பச்சை யுமையவளே

(ப) கன்னிபச்சை யுமையவளே போற்றி போற்றி
உன் பெண்ணடிக்கு யான் போற்றி

பச்சையம்மன் பேரில்

கண்சிவந்து கோபித்தாளாம் என்ற மெட்டு

(பூ) முல்லை என்ருள் முல்லையம்மா என் — அம்மன்
திருமுல்லை வாழைநகர் — தாயே
திருமுல்லை வாயலிலே என் — அம்மன்
வளர்ந்தெழுந்த பச்சையம்மாள் — தாயே
இலைகளெல்லாம் பச்சையம்மாள் — அம்மன்
இலைக்காம்பு வேங்கைநிறம் — தாயே
காய்களெல்லாம் பச்சையம்மா — அம்மன்
காய்க்காம்பு வேங்கைநிறம் — தாயே
மன்னுதர் தேவியம்மா என் — அம்மா
மாதுபச்சை பார்வதியே — தாயே
பஞ்சயரைக் காக்குமந்த — அம்மன்
பாரநல்ல தவமுனிகள் — தாயே
பக்கத்துணை காவல்செய்வார் — அங்கே
ஏழுநல்ல தவமுனிகள் — தாயே

(ப) ஆமாம் ஆமாம்

நையாண்டி

(பூ) ஏழுமுனி கெஜஜை கட்ட இளையமுனி வாளுருவ
வாளுருவி தோளிலிட்டார் வடகடலை பார்வையிட்டார்
கத்தியுருவி தோளிலிட்டார் கருங்கடலை பார்வையிட்டார்
ஏழுமுனிகூடவல்லோ எழுந்திரம்மாள் பச்சையம்மாள்

கதறியே வந்ததோர் மகிடனை வென்றுமே
  கயிலைபதி சேர்ந்தவளும் நீ
கண்ணுடன் வுதவியால் முனிவர்கள் யெழுவருடன்
  கலிமீதில் பூசைபெற்று
கனவொளி வாழைநகர் திருமுல்லைவாயல் வாழ்
  கன்னிப் பச்சை யுமையவளே

(ப) கன்னிபச்சை யுமையவளே போற்றி போற்றி
  உன் பெண்ணடிக்கு யான் போற்றி

பச்சையம்மன் பேரில்

கண்சிவந்து கோபித்தாளாம் என்ற மெட்டு

| | |
|---|---|
| (பூ) முல்லை என்றுன் முல்லையம்மா என் | அம்மன் |
| திருமுல்லை வாழைநகர் | தாயே |
| திருமுல்லை வாயலிலே என் | அம்மன் |
| வளர்ந்தெழுந்த பச்சையம்மாள் | தாயே |
| இலைகளெல்லாம் பச்சையம்மாள் | அம்மன் |
| இலைக்காம்பூ வேங்கைநிறம் | தாயே |
| காய்களெல்லாம் பச்சையம்மா | அம்மன் |
| காய்க்காம்பூ வேங்கைநிறம் | தாயே |
| மன்னுதர் தேவியம்மா என் | அம்மா |
| மாதுபச்சை பார்வதியே | தாயே |
| பஞ்சயரைக் காக்குமந்த | அம்மன் |
| பாரநல்ல தவமுனிகள் | தாயே |
| பக்கத்துணை காவல்செய்வார் | அங்கே |
| ஏழுநல்ல தவமுனிகள் | தாயே |

(ப) ஆமாம் ஆமாம்

நையாண்டி

(பூ) ஏழுமுனி கெஜஜை கட்ட இளையமுனி வாளுருவ
  வாளுருவி தோளிலிட்டார் வடகடலை பார்வையிட்டார்
  கத்தியுருவி தோளிலிட்டார் கருங்கடலை பார்வையிட்டார்
  ஏழுமுனிகூடவல்லோ எழுந்திரம்மாள் பச்சையம்மாள்

[பூ] வசன நடை .—

அரிவுனக்கு அன்னை அய்யா — அயினரப்பா
அரன்வுனக்கு தகப்பனப்பா — என் சுவாமி
மோகினி ரூபம்கொண்டு
முன்மடியில் பிள்ளை பெற்ருர் — அயினரப்பா
பத்மாசூரன் தன்னாலே
பாலனாய் பிறந்தவரே — இம்மனையில்
பாலன் குறைதீர்க்க
பகவானே வந்தமரும் — என் சுவாமி
அனைவர் ஓர் முகமாய்
அமரய்யா புண்ணியனே

[ப] அனைவர் ஓர் முகமாய்

## கார்த்தவ சுவாமி உற்பத்தி சபை வணக்கம்

[பூ] கண்ணியமோ காம்பரி சொக்கர்மீனுட்சுயுமை
கழலினை போற்றி நாளும்
கனகசபையெனும் பெயர் விளங்கும் புத்திர
கனகம்மிகும் ஷண்முகம்சீர்
கலியுகமீ தினில் தழைத்திட சத்திவேல்
கருத்தினை விளக்கிக் காட்ட
கப்பா நதிக்கரை காமாட்சி பீடம்கார்
கடவுளாம் கார்த்த லிங்கம்
கதைதனை வுரைத்திட பஞ்சாமிர்தமென
கழருவீர் பிழைபொருத்து

[ப] அரகரா மஹாதேவா ஓம்ஓம்.

## கார்த்தவ சுவாமி உற்பத்தி

### கும்மி வர்ண மெட்டு

ராஜயோகிகள் சித்தர் பலர்களும்
ராயபுரிநகர் வாழ்ந்திலங்கும்
ராமனாதபுரம் மன்னர் வணங்கிடும்
ராஜேஸ்வரி அங்கமுத்து வாழும்
பட்டணம் பூசாரி—கனகசபை நாயகர்
பகவதியருளினால் யின்றெடுத்த

பக்தன் ஷண்முகன் மாணவன் சக்திவேல் 2
பகரனுள்ளன் கார்த்த லிங்கம் கதை

ஆதிசிவனுன ஆளன் மனமதை
ஆரணங்கவுமை சோதித்ததால்
ஆடித்திரிந்திடும் சிற்றெறும்பால் சிவன் 3
ஆங்கார கோபமாய் சாபம் தந்தார்

காசியென்னும் திருக்ஷேத்திரத்தில்—பெண்ணே
காரணி நந்தவன மமைத்து
காலகண்டன்பாதம் தொழுது நின்ருள்—கண்ணே
காரணி நந்தவன மமைந்து
காலகண்டன்பாதம் தொழுது நின்ருள்—கண்ணே 4
காந்தாரிவுன்சாபம் நீங்குமென்ருர்

சிங்கார வனத்தை உண்டு செய்து—அம்மன்
சித்திரமண்டபம் அலங்கரித்து
சிவஞர் அளித்ததோர் கார்த்தலிங்கமென்று 5
சிறுவரை காவல் அமைத்தாளாம்

அன்னேயாள் சொல்மொழி கேட்டு கார்த்தவரும்
அக்ஷணம் நந்தவனம் காக்க
அழகு கன்னிமார் எழுவருங் கூடியே 6
அன்பான பூமலர் கொய்யலுற்ருர்

மலர்களே பரித்தெழுவரும் கூடியே
மங்கைமார் கங்கையிலாடையிலே
மல்லிகை காணுத கோபத்தால் கார்த்தானும் 7
மங்காத ஆடையை தாஞெளித்தார்

தங்கையாள் இளேயகன்னி மறைந்ததை
தக்ஷணம் சென்று கைலேயிலே
தண்ணீரும் கண்ணீர் கலங்கிட அனேவரும் 8
தட்க்ஷணமூர்த்தியுட னுரைத்தார்

எந்நேரமும் தவநிஷ்டை புரிசிவன்
எதிராக கன்னிமார் முகம்பார்த்து
என்னகுறை வந்து நேர்ந்தது உன் தங்கை 9
எங்கு காணேமென்று தானுரைத்தார்

புனல்ரைந்தோன் வுரைத்தான் கேட்டு—அந்த
புஷ்பம் பரித்ததோர் கன்னிமார்கள்
புண்ணிய மூரத்தியே வணங்காத்தான் ஆடையை
புன்னை மரத்தின்மேல் தானெளித்தான் 10

என்றுவுரைத்திட ஆதிசிவன் வுமை
எருதேரி நந்தவனமிறங்கி
எங்கெங்கும் தேடி ஞானத்தாலறிந்து
எதிராக நின்று தானழைத்தார் 11

உள்ளம் நடுங்கிமுகம் வேர்த்து- அய்யன்
உண்மை மொழியெல்லாம் தானுரைக்க
உனக்கிந்த ஆங்காரம் கொண்டதினல்-இப்போ
உறுதியாய் சாபமதை தந்தேனென்ருர் 12

காற்ருன் அலகை மறையறை கழுவாய்
காற்ருன் வலையனுய் போவாயென்று
காலனை யுதைத்ததோர் சாபமிட அங்கே
காரணி தடுத்து சாபம் நீக்க 13

பர்வதராஜன் மகளான பார்வதி
பத்தா சாபமதை மாற்றிடவே
படியளந்த பரன் சினமது கொண்டங்கு
பதறியே பேயாக போகவென்ருர் 14

சாபத்தை பெற்று சாம்பலா தேவியும்
சாஷ்டாங்க மாகவே தெண்டனிட்டு
சாற்றெருணகம்பா நதிக்கரையோரம்
சாம்பசிவனுரை தவம் புரிந்தாள் 15

கண்மூடி கல்லான மரத்தடியில் அம்மன்
கஞ்சி காமாக்ஷியாய் சடைவிரித்து-
களிப்புடன் கார்த்தவராயனுக்கு அங்கே
கடுகென கட்டளை ஏதுரைப்பாள் 16

என் மனம்போலவே நாலுபிறப்புநீ
எடுத்து ஜென்மமும் தான் கழிந்து
என்னிடம் தேடிநீ வந்தாலே வுனக்கு
எந்த வரம்கேட்டால் நான் தருவேன் 17

அன்னை வுரைத்த மொழிகேட்டு அங்கே
அன்புடன் பிராமணப் பெண் கருவில்
அய்யன் ஜெனனமாகி வெளிவந்து 18
அட்சணம் கோரைபுல் மீதமர்ந்தார்

காராம்பறச்சி மனையிடம் சென்றுமே
காந்தாளமாய் கூவி மனையெறிக்க
காப்பாற்றினால் தீம்பு வருகுமென்று அப்போ 19
காளையை பிள்ளையார் கோவில் விட்டார்

புத்தி நெறியுள்ள கார்த்தலிங்கம் அங்கே
விள்ளிமான் புள்ளை மேய்கையிலே
புவனமதில் மெச்சபனி நீரைப்போலாக 20
புனலணிந்தோன் மகன் தானிருந்தார்

கலைமானும் புல்லை மேய்ந்திடவே அப்போ
கர்ப்பமாய் அய்யன் தனித்திடவே
கவலை மெத்தவுண்டாகி அழ 21
கடுகெனவே அய்யன் வெளியானார்

தோட்டி அவரையும் கண்டெடுத்து அங்கே
தோளின் மீதில்வாரி வருகையிலே
தோட்டத்தை சுற்றியே சிவப்புடையான் அங்கே 22
தோளினில் என்னடா வென்றுரைத்தான்

சுரக்காயிது வென்று தானுரைக்க தோட்டி
சுவாமி யிருகாலை தொங்கவிட
சுருக்கா யரிந்து சிவப்புடையான் 23
சுத்தமாய் பிள்ளையை வாங்கி வந்தான்

ஆனந்தமாகவே சிவப்புடையானங்கே
ஆண்டவரை அங்கு வளர்க்கையிலே
ஆரியப்பு ராஜன் தானறிந்து அப்போ 24
ஆதிமூல ரங்கர் பூஜை செய்தார்

அழகு கண்ணிவுயிர்தான் பிடித்து ரங்கர்
அய்யர் மனையில் வுதிக்க செய்து
அம்மை ஆரியமாலையென்று நாமம் 25
அன்பாகவே பேருமிட்டாராம்

கண்ணிபிறந்த பலன் பார்த்து அப்போ
கடுகவே கோட்டைகள் தானும் கட்டி
கண்டிப்பாய் ஆண்வாடை கூடாதென அங்கே
கட்டு திட்டமுடன் காவல் வைத்தார் 26

கன்னி ஆரியமாலை தாதியுடன் இருவர்
கங்கையில் கிரீடை ஆடையிலே
கஸ்தூரி வாடையும் மஞ்சள் வாடைகளும்
கண்ணல் கண்டல்லோ கார்த்தலிங்கம் 27

மாதா மனோன்மணி காமாக்ஷியைத் தேடி
மாமலரால் பூஜைதானும் செய்து
மாலை மீதில் மிக ஆவல்கொண்டு சுவாமி
மார்போ டணைந்திட வரம்கேட்டார் 28

வேதாந் திகாமாக்ஷி வேண்டாம் மகனே நீ
வேதியர் மகளை தொட்டாயானால்
வேதனையுண்டாகும் நீ சென்று கண்ணே
வேறுபெண்ணை பாருமென்றுரைக்க 29

சங்கரி சொன்ன வார்த்தையினால் சுவாமி
சப்பாணியப்பனும் சின்னனையும்
சமர்த்துடன் வென்று சதிராக சுவாமி
சட்டென வண்ணார வல்லியரை 30

சாந்தழகி யென்னும் பெண்ணாளை சுவாமி
சாமர்த்தியமாக வேரறுத்து
சாம்பவி வரத்தால் உகந்தழகி நல்ல
சாதித்து சிறை தானெடுத்து 31

அன்னதுளசி அருவையபரை சுவாமி
அம்மை வரத்தால் சிறையெடுத்து
அழகுள்ள மாலைக்கு வளையவிட்டு அங்கு
அரிராமர் கிருபையால் மணம் முடித்து 32

வல்லத்து மாங்காளி கோவிலைதேடி
கருத்தப் படுத்திட அப்பொழுது
வல்லவா நீ சென்று கழுவேறி நின்றால்
வடிவழகில் மாலையை அணைவா யென்றாள் 33

காளியிடம் வரம் பெற்றுமே கார்த்தாகும்
கஷ்டத்துடனவர் கம்பாநதி
காமாக்ஷியை தேடி மாலையை காட்டி 34
காலடிபணிந் த நருமென

அம்மை காமாக்ஷி மகனைகண்டு
அரன் சாபப்படியே நேருமென
அள்ளி வெண்ணீரை தாளிக்க சுவாமி 35
அழுகுகழுமரம் ஏறிநின்றார்

முகுந்த மாயனுரைப்படிக்கு கைலை
முக்கண்ணன் சிவனார் சாபம்தீர்ந்து
முதன்மையாய் கழுமரம் விட்டிறங்கிசாமி 36
முன் வந்து பரமனை தெண்டனிட்டார்

காமனை எரித்த சிவபெருமானங்கே
கார்த்தலிங்க சுவாமி முகம்நோக்கி
காரிகை நால்வர் மங்கையை திருமணம் 37
காளையே நீ முடியென்றுரைத்து

தேவகணங்களை தானழைத்து சுவாமி
தேவியர் நால்வரை குந்தவைத்து
தேடக்கிடையாத சிவபெருமானங்கே 38
தேவனுக்கு மணம்தான் முடித்தார்

திருமணம் முடித்து நால்வருமே சுவாமி
திருச்சி நகர்தனில் வாழ்ந்து வந்த
தித்திக்கும் செங்கரும்பான ருசிபோல 39
தினம்தினம் படிக்கவோ திவைத்தேன்

கண்டவர் புகழும் ராயபுர நகர்
கனகசபை மைந்தர் ஷண்முகம்சீர்
கலியுகம் மீதினில் சத்திவேல் பாட 40
களங்கமில்லாமலே ஓதிடுவீர்

சென்னை வண்ணாரப்பேட்டை உள்ளாறு அம்மன் பேரில்
கண்சிவந்து கோபித்தாளாம் அம்மன் என்ற மெட்டு

[பூ] ஆதியிலே வண்ணார்கள் என்னும்
ஆண்டிருந்த எல்லையிலே தாயே
அந்தமிகு சுந்தரியாய் அம்மன்
அவதார வுள்ளாறு தாயே

வண்ணூர்வாழ் பேட்டையிலே அம்மன்
வந்துகோவில் கொண்டமர்ந்தாள் தாயார்
எல்லைக் கதிகாரி நான் என்று
எழுந்தாயம்மா வுள்ளாருக தாயே
தென்கரையில் உள்ளாறு அம்மன்
வடகரையில் சேணியம்மா தாயே
இருவர்களும் வண்ணூர்வார் பேட்டை
இருந்து பூஜை கொள்ளவந்து தாயார்
கடையாம் நல்ல கடைவீதி தன்னில்
கண்டவர் கரங்குவிப்பார் தாயே
எடுத்துமுதல் கெருடஸ்தம்பம் மீதில்
எல்லவரும் கொடியேற்றி அங்கே
எட்டு நாள் கொட்டியம்மா தாயே
எடுத்து பறை சாற்றிடுவார் அம்மன்
காப்பு கட்டி பொங்கலிட்டு தாயே
காருமென்று தொழுதிடுவார் அம்மன்
பத்துநாள் உற்சவங்கள் தாயே
பறைந்து செய்து போற்றிடுவார் அம்மன்
ப] ஆமாம் ஆமாம்

## துரோபதையம்மன்பேரில் பாட்டு

[பூ] தேடி யழைக்குறேனே உன்
திருமுகத்தைக்காண இங்கே
எங்கேயோ பாராமுகம் தாயே
இவ்விடம் ஏகாந்தம்
ஒருகுலமா இருகுலமா அம்மா
ஐவர் குலம் என் தாயே
பெற்ருளே குந்தியம்மாள் உனக்கு
பேருமிட்டார் மாயவரும்
வளர்த்தாளே குந்தியம்மாள் அங்கே
வரிசையிட்டார் மாயவரும்
காண்டாவன மெரித்த அந்த
காண்டீபன் தேவியரே
ஐவருக்கு தேவியம்மா தாயே
அழியாத துரோபதையே

காடுபோன பாண்டவர்க்கு நீயும்
கூடபோன தேவியரே தாயே
ஐவர் ஒருமனதாய்
ஆத்தாளே வந்தமரும்
[ப] ஐவர் ஒருமனதாய்

அம்மன் திருவிளையாடல் வர்ணிப்பு
ஐயே ருனந்தமாட எனதம்மாளும் பூங்காவனத்தாளுமாட
என்ற மெட்டு

[பூ] சத்தி சதாசிவனோட அம்பாள்
சங்கரியும் வேணரூபம் கொண்டாளே மாது
அங்காள ரூபமானளே மலையனூரில்
ஆடினள் சுடலையில் யாவரும் ஓட (ச)
மகிடா சூரனை வென்றுள் அங்காளவுமை
மண்டலத்தில் யாவர்களும் கண்டு பூஜைகொள்ள
ரேணுகை நாமம் பூண்டாளே அம்மாள்
கார்த்த வீரியரை கருவறுத்தாளே (ச)
பரசுராமர் தாயுமே நல்ல சன்னதி
படவேட்டில் அமர்ந்தாளே பூஜைகொள்ள அங்கே
மாரியென்று உருவம் பூண்டாளே சத்தி
காளிரூபம் எடுத்தாளே கண்டவர்கள் வாட (ச)
பேருன மாரிமுத்து தாயே அம்மன்
பெரிய பாளையத்தில் அமர்ந்தாளே மாது
சந்துக்கு சந்துகள் எல்லாம் அம்மா
சந்தியம்மா சேணி என்று நாமம் பூண்டாளே (ச)
குண்ணுத்தா துலுக்காணம் என்று அம்மன்
கும்பிடும் தெய்வமாக கொண்டாளே பேரு
கீர்த்தி பெற்ற எங்கள் குலதெய்வம் அம்மன்
கோரினவர்களுக்கு குறை ஒன்றும் இல்லை (ச)

பூசாரி வசன நடை.—

எழுவர் ஒருமனதாய் மனோன்மணி தாயே
எழுந்தாயா தீபமதில்

அணவர் ஒருமுகமாய்
தூங்கி எழுந்ததைப்போல்
துள்ளி விளையாடணுமே
காமாக்ஷி தீபமதில்
என்னகுறை நேர்ந்தாலும்
எடுத்துரைக்க வேணுமிங்கே
குழந்தை என்முன்
தொம்பரை பொன்னதுபோல்
கொஞ்சி விளையாடணுமே
என் தாயே நீ
வந்தேண்டா மகனே என்று
வரங்கொடுக்கும் வேளையிங்கே
[ப] வந்தேண்டா மகனே என்று

மதுரை கூன்பாண்டியனால் சமணரைக் கழுவேற்றிய
அண்ணன்மார் பேரில் வர்ணிப்பு

ஆரா பெருமணலாம் தாயே பெருமணலாம் என்ற மெட்டு

[பூ] சமணரைக் கறுவறுக்க சாமி கறுவறுக்க
சண்முகனார் நீ அல்லவோ சாமி நீ அல்லவோ

[ப] அரகரா அரகரா

[பூ] சம்பந்த மூர்த்தியானாய் சாமி மூர்த்தியானாய்
சமணரை வெற்றிகாண சாமி வெற்றிகாண

[ப] தேவதா தேவதா

[பூ] வீரபத்ரர் இருவருமே சாமி இருவமே
இருவர்கள் ஒன்றுகூடி சாமி ஒன்றுகூடி

[ப] ஆமாம் ஆமாம்

[பூ] உலகமாதா உதவிகொண்டீர் சாமி உதவிகொண்டீர்
சமணர்படை கள்ளரெல்லாம் சாமி கள்ளரெல்லாம்

[ப] ஆமாம் ஆமாம்

]பூ] கடவுளின் கட்டளையாம் சாமி கட்டளையாம்
கண்டதுண்டம் செய்துவிட்டீர் சாமி செய்துவிட்டீர்

[ப] ஆமாம் ஆமாம்

[பூ] சின்ன அண்ணர் பெரியண்ணனும் சாமி பெரி [யண்ணனும்
மாறுவேடம் கொண்டீரையா சாமி கொண்டீரையா

[ப] ஆமாம் ஆமாம்

[பூ] மாண்டார் சமணரெல்லாம் சாமி சமணரெல்லாம்
மானிடர்கள் பூசைகொள்ள சாமி பூசைகொள்ள

[ப] ஆமாம் ஆமாம்

[பூ] வசன நடை விளக்கில் வர்ணிப்பு :—
பெரியண்ணன் சின்னண்ணனுக காமாக்ஷி கைவிளக்கில்.
பிரியம் கொண்டு வந்தேனென்று
பூரித்து பொங்குமையா புண்ணியரே நீங்கள்
பூஜைமுகம் தானமர்வீர்
[ப] பூரித்து பொங்குமையா

பெரியாண்டவர்பேரில் விருத்தம்

[பூ] சர்வசராசர வொளியாகி பதியினில்
சகலவுயிர்கார்க்கும் சிவமே
சனகாதி நால்வர்முனி செவியதில் வோதியே
சட்டமுனியான சிவமே
சடைமுடி கொங்கையுடன் அரவமே துலங்கிட
சங்கரான சிவமே
சங்கத் தமிழ் மதுரை சொக்கலிங்கேசருய்
சகலவரம் தருகும் சிவமே
சண்முகனைங்கரன் பார்வதி சமேதராய்
சாய்ந்திடும் மன்னுத சிவமே
[ப] ஓம் ஓம் அரகரா ஓம் நவசிவாயா

எம்பெருமான் வாழ்முனியாக வந்த வர்ணிப்பு
ஆங்காரரூபமாளுள் அம்மன் என்ற மெட்டு

[பூ] ஆதிவொரு காலமதில் அம்மன்
ஆதிசிவன் முகம் நோக்கி அங்கே
ஆதவனும் மதிரவனும் யாரு
ஆரணங்கு முன்னுரையும் என்ருல்
அந்தவுரை தான்கேட்டு ஐயம்
அருணனும் நான் சந்திரன் நான் என்ருர்
ஆளன்வுரை தான்கேட்டு அம்மன்
ஆராய்த்து தெரியச் சொல்லும் என்ருள்
ஈஸ்வரி சொன்னவாக்கை கேட்டு
ஈஸ்வரனுர் எடுத்துரைக்க அங்கே
பெண்ணே பெண்ணே பார்வதியே கேளும்
பெருமாளின் சொந்த தங்கை பெண்ணே

வலதுகண்ணு சூரியன்தான் பெண்ணே
இடதுகண்ணு சந்திரன்தான் கண்ணே
என்றுரைத்தார் பார்வதிக்கு சிவனுர்
எதிராக தட்க்ஷமூர்த்தி அய்யன்
அந்தசேதி கேட்டல்லவா அம்மன்
அம்பிகையும் சோதிக்க அப்போ
சுவாமி இரு கண்ணை மூடி அம்மன்
சுந்தரியாள் காணும் நேரம் அங்கே
சராசரங்கள் இருள்சூழ அப்போ
சங்கரியாள் நடுநடுங்கி நின்ருள்

[ப] ஆமாம் ஆமாம்

ஆரா பெருமணலாம் சாமி பெருமணலாம் என்ற மெட்டு

[பூ] தேவலோகம் கருத்திடவே சாமி கருத்திடவே
தேவரெல்லாம் தான் நடுங்கி ஐயா தான் நடுங்கி
காடுமலையில் செடியில் வாழும் சாமி செடியில்வாழும்
காக்கை கரடி மிருகமெல்லாம் அங்கே மிருகமெல்லாம்
கரிநிறம்போல் தான்கறுத்து சாமி தான்கறுத்து
காத்தரையும் தொழுகையிலே அப்போ தொழுகையிலே
குய்யோ முறையோவென்று அங்கே முறையோவென்று
குருபரனை தொழுகலுற்ருர் சாமி தொழுகலுற்ருர்
அந்தசத்தம் கேட்டாரே சாமி கேட்டாரே
அரனரும் பரமசிவம் அப்போ பரமசிவம்
பார்வதியை பார்த்தல்லவா சாமி பார்த்தல்லவா
பரமரவர் ஏதுரைப்பார் சாமி ஏதுரைப்பார்
இருகண்ணை விட்டுவிடு பெண்ணே விட்டுவிடு
இன்பமுள்ள பெண்ணணங்கே மாதே பெண்ணணங்கே
கண்ணையிரண்டும் மூடினதால் இப்போ மூடினதால்
கலங்குது உலகமெல்லாம் கண்ணே உலகமெல்லாம்
சித்தர்கள் மனம் கொதிக்க நீ மனம் கொதிக்க
பிற்பரியே நீ செய்ததினுல் கண்ணே செய்ததினுல்
பிடியடி சாபமென்ருர் அப்போ சாபமென்ருர்
சிஞ்சகனுர் பார்வதியை தான் பார்வதியை

அந்தவுரை கேட்டாளாம் அம்மன் கேட்டாளாம்
அம்பிகையும் ஏதுரைப்பாள் அங்கே ஏதுரைப்பாள்
[ப] ஆமாம் ஆமாம்

இரட்டை அடி சீர்நடை

[பூ] என்ன சாபம் சுவாமி தருவீரய்யா
எனக்குரையும் சிவபெருமான்
என்றுரைக்க அங்கே பார்வதியாள்
எடுத்துரைப்பார் அப்போ ஆதிசிவன்
காசியிலே பெண்ணே கால்நடையால்
காரணியே நீ தனியே சென்று
தருமம் நல்ல முப்பத்திரண்டு
தருகவேண்டும் பெண்ணே தனியாக
பன்னிரெண்டு பெண்ணே தன்வருடம்
பரமர்தவம் கண்ணே செய்யவேணும்
இப்படிக்கு தர்மம் செய்துவந்தால்
இச்சாபம் பெண்ணே நீங்குமடி
தேவர் மனம் தான் குளிரும்
தேவியரே என்றுரைத்தார்
அந்த சாபம் அம்மன் பெற்றல்லவோ
அம்மையரும் அங்கே நடக்கலுற்றார்
காசிபதி அம்மன் தான் நடந்து
கடுகெனவே அம்மன் பழனமானுள்
இருபக்கம் தாதியுடன்
இன்பமாக அம்மன் வாராளே
தனிவழியாய் அம்மன் ஏகிவாராள்
தட்க்ஷணியால் வுமை பார்வதியாள்

[ப] ஆமாம் ஆமாம்

கொம்மி

[பூ] அகஸ்தியர் கௌதமர் துர்வாசர் வனமும்
அம்பை கண்டு போற்ற தான் நடந்து
அண்டர் முனிவர்கள் வணங்கிட பார்வதி
அழகுள்ள காசிபதி நடந்தாள்

அறவளமர்த்துமே காசியிலே அம்மன்
அழகிய நந்த வனமமைத்து
அண்டசராசரம் தான்படைத்த அம்மன்
அதிர்திட வுலகில் வருகையிலே 2

அந்தரவீரனும் ஆகாயவீரனும்
அச்சமில்லாமல் பவனிவர
அம்மைநடை அலங்காரமதை கண்டு
அதட்டியே யாரென்று தானிருத்தி 3

அடடாவுனைப்போல் மன்மத வுல்லாசி
அழகினில் இவ்வுலகிலில்லை யென்று
அண்ணனுக் கேற்ற மனைவியாள் நீயென
அழைத்திட அப்போது வீரர்களும் 4

அஞ்சாத வஞ்சக நெஞ்சக வீரரை
அனல்கொண்டு இச்சேதிகேட்டு அம்மன்
அடாத வார்த்தையை யுரைக்காதீர் நீரும்
அண்ணாவே என்றுரைக்க லுற்றான். 5

[ப] ஆமாம், ஆமாம்.

குறவஞ்சி நடை

[பூ] அம்மனை கண்டு வீரர்தான் மறித்து அங்கே
தான் மறித்து அங்கே
அண்ணனுக்கேற்ற ராணியாகுவாய் நீ யென்றார் 1

வீரர்களும் வுரைத்த மொழிகேட்டு நல்ல அம்மன்
கேட்டு நல்ல அம்மன்
வீரவதி கோபமாகி ஏதுரைப்பாளங்கே 2

என்னைப்போல் தங்கைமார்கள் வுங்களுக்கு அண்ணா
உங்களுக்கு அண்ணா
இவ்வுலகில் இல்லையோசொல் மறிக்காதே யென்றாள் 3
பார்வதியாள் சொன்னசேதி பாபிகளும் கேட்டு

பாபிகளும் கேட்டு
பாசாங்கு பேசவேண்டாம் வாருமடி யென்றார் 4

தனிவழியே போகையிலே தர்மமதை வளர்க்க ஐயா
தர்மமதை வளர்க்க
தடுக்க எண்ணம் கொள்ளலாமா பாபம் நேருமென்றாள் 5
தடுத்துபேசும் வார்த்தை தன்னை தனியாக விட்டு பெண்ணே
தனியாக விட்டு பெண்ணே
தமையனுடன் வாழ்ந்திடுவாய் வாழுமென்றாரங்கே 6
ஏதேதும் எடுத்துரைத்தும் வாதாட வீரரங்கே
ஏகிவரும் நேரமங்கே பார்வதியுமப்போ 7
[ப] ஆமாம், ஆமாம்.

கண்சிவந்து கோபம்கொண்டாள் அம்மன் என்ற மெட்டு

[பூ] பாபபுண்ணியம் எடுத்துரைத்தும் அம்மன்
பாவி வீரர் கேட்கவில்லை யங்கே
வாதாடி வீரருடன் அம்மன்
வாராளே பார்வதியா எப்போ
கண்டாரே வீரர்களும் அங்கே
கடுகவந்து தான்மறித்தா ரப்போ
விடமாட்டோம் விடமாட்டோம் பெண்ணே
வீரண்ணர் அழைக்கசொன்னா றென்றார்
அழகினில் மிகுந்தவளே பெண்ணே
அண்ணனுக்கு ஏற்றராணி என்றார்
இந்த வார்த்தை ஈஸ்வரியாள் கேட்டு
இவ்விடத்தில் யாரில்லையோ என்றாள்
கூக்குரல் தான் இட்டாளே அம்மன்
கூசாத முனிவரெல்லாம் வந்தார்
வீரரும் முனிவர்களும் அங்கே
வீரமுடன் போர்புரிய அப்போ
மூர்ச்சையது தானடைந்தார் அங்கே
முனிவர்களும் வீரரிடம் அப்போ
அந்த நல்ல சமயத்திலே அம்மன்
அண்ணன் மாயன்தனை நினைத்தாள் அப்போ
எம்பெருமான் வாழ்முனியாய் வந்து
எதிராக தங்கை முன்னே நின்றார்
[ப] ஆமாம் ஆமாம்

நையாண்டி

(பூ)முனிவர் மூர்ச்சையாகிடவே முக்கண்ணியாள் ஏதுசெய்தா
அண்ணனந்த மாயவனை அம்மையாரும் தானழைத்தாள் [ள்
தங்கைகுரல்கேட்டு தரணியை யளந்தவரும்
அண்டபுஜமுடனே அதிர்ந்திட பேருருவாய்
அண்டசராசரமும் அகிலமெல்லாம் வுருவாகி
மட்டம்புஜம் படைத்து மண்ணளந்த மாயவனர்
வாழ்முனி யரசராக வாராரே தங்கையிடம்
பார்வதிக்கு முன்பாக பார் அளந்தோன் ஏதுசெய்தார்
பாரளந்தோர் வந்தல்லவா வீரர்களை தான் வதைத்தார்
வீரவதியாள் முன்பாக சண்டாள வீரர்களை
சங்கரித்தார் வாழ்முனியும் தங்கையர்க்கு உதவியாக
தயாளகுண எம்பெருமாள் தன்பதிக்கு ஏகிவிட்டார்
(ப) ஆமாம் ஆமாம்

ஆங்கார ரூபமானுள் அம்மன் என்ற மெட்டு

(பூ) வெள்ளெறுக்கங் கண் காடு வெட்டி அம்மன்
முல்லைவனம் கோட்டை கட்டி அங்கே
காடுவெட்டி முள்பொறுக்கி அம்மன்
கட்டிவைத்தாள் நந்தவனம் அங்கே
மேடுவெட்டி முள்பொறுக்கி அம்மன்
முல்லைவனம் உண்டுபண்ணுள் அங்கே
முல்லையென்ரு முல்லையம்மா தாயே
திருமுல்லையாம் வாழைநகர் அங்கே
திருமுல்லை பதியாளே அம்மன்
திருநடன பச்சையம்மாள் மாது
அண்ணமார் முனிவர் ஏழு போகள்
அதிகாரம் செய்துவர அங்கே
வாழ்முனி கூடவல்லோ அம்மன்
வாட்டமாக கோவில் கொண்டாள் அங்கே
மூலகுருனுதராமே ஐயன்
முதல்மேடை மன்னலிங்கம் சுவாமி
அரையில் குருனுதராமே ஐயன்
அம்பலத்தில் மன்னலிங்கம் சுவாமி

மன்னுதர் கைக்கிளியே அம்மன்
மனோன்மணியே பச்சையம்மா தாயே
ஒண்டிவீரர் தன்னுடனே அம்மன்
ஓங்காரி பச்சையம்மாள் வாராள்
காருமம்மா பெற்றவளே அம்மன்
காரணியே பச்சையம்மா மாதர்

(ப) காருமம்மா பெற்றவளே

பெரியாண்டர் மீதினில் விருத்தம்

(பூ) அரசர் சேரர் சோழர் பாண்டியர் மதுரையில்
அட்டாலும் சொக்க லிங்கம்
அறுபத்து நான்கு திருவிளையாடல் காட்டியே
அவனியில் நின்ற லிங்கம்
அகம்புரி சமணரை யழிக்கவே சம்பந்தரை
அளித்திட வந்த லிங்கம்
அன்புடைய வாணிச்சி பிட்டுதனை வுண்டுமே
அடிபட்ட தர்ம லிங்கம்
அயன்சிரம் கிள்ளியே சுடலையிலாடிய
அம்பலத் தாடும் லிங்கம்
அதிகார நந்திமேல் பதியமர்ந் துலகெல்லாம்
அடியவரைக் கார்க்கும் லிங்கம்
அரவமுடன் ருத்ராட்ச புலிதோலும் மழுமானும்
அணிந்துகுறி காட்டும் லிங்கம்
அங்கம்மையுடன் பொங்க மங்களமாய் வரும்
அய்யன் பெரியாண்டி லிங்கமே லிங்கம்

(ப) அங்கம்மையுடன்

சமய நடை சீர்

(பூ) பேரில் நல்ல பெத்தவராம் பெரியாண்டி சுவாமியாராம்
உருவில் நல்ல பெத்தவராம் உலகளந்த மாயாண்டி
உத்திராக்ஷம் தரித்தாண்டி உத்தமராம் மாயாண்டி
பதமராக்ஷம் தரித்தாண்டி பரமல்லோ மாயாண்டி
மாரனை வதைத்தாண்டி மாடேறும் மாயாண்டி
அங்கதனை எரித்தாண்டி அரனல்லவா மாயாண்டி

சடையை விரித்தாண்டி சங்கரனும் மாயாண்டி
முப்புரத்தை எரித்தாண்டி முக்கண்ணனும் மாயாண்டி
சிரித்துபுரம் எரித்தாண்டி சிவனல்லவா மாயாண்டி
கங்கைநல்ல தரித்தாண்டி கண்டனல்லோ மாயாண்டி
காலனையும் உதைத்தாண்டி காலகண்ட மாயாண்டி
[ப] ஆமாம் ஆமாம்

மாயிமருளியம்மா ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] பிறந்தபிள்ளை முடிவாங்கும் ஆனந்தமே
பிரியமுள்ள பெரியாண்டி ,,
ஆயிரத்து எட்டுலிங்கம் ,,
ஆகிநின்ற மாயாண்டி ,,
சிறுத்தொண்டன் பிள்ளைகறி ,,
சிறப்புடனே உண்ணுண்டி ,,
வள்ளாளன் பிள்ளையாக ,,
வந்துதித்த மாயாண்டி ,,
நால்வருக்கு முத்திதந்த ,,
நாதாந்தன் மாயாண்டி ,,
பதினெட்டு சித்தருள்ளம் ,,
பட்சமுட னமர்ந்தாண்டி ,,
அறுபத்து மூவருக்கு ,,
அமுர்தம் பொழிந்தாண்டி ,,
ஆனையுரி போர்த்தினுண்டி ,,
ஆதிசிவன் மாயாண்டி ,,
புலித்தோ லணிந்தாண்டி ,,
புனலணிந்தோன் மாயாண்டி ,,
குண்டோதரன் தனையழைத்து ,,
குறையா வைகை தந்தாண்டி ,,
தாருகா ரிஷிகளையும் ,,
தானழைத்து துடியாண்டி ,,
[ப] ஆமாம் ஆமாம்

ஆனந்தக்களிப்பு என்ற மெட்டு

[பூ] உத்திராக்ஷம் தரித்த சிவனுட—பொல்லா
உள்ளங்காலின் முயலக சூரனுமாட

உச்சிசடை தன்னில் கங்கையுமாட—மந்த்ர
உடுக்கையெனும் பஞ்சாக்ஷர ஓங்காரமாட (உ)

பத்ராக்ஷ தாவடமுமாட தெய்வ
பக்தர்கள் அரோகராவென்று ஜெயம்பாட
பரந்தாமன் பிர்மனுமாட—பக்கம்
பதஞ்சலி யிருவர்கள் கைத்தாளம்போட (உ)

தில்லைவன நடனமாயாண்டி—இந்த
திசையெலாம் புகழவே பரவி நின்ருண்டி
திரிசூரன் தன்னை எரித்தாண்டி—ஆதி
தில்லை காளியுடனுடி ஜெயத்தைப் பெற்ருண்டி (உ)

கள்ளான மரத்தடியாண்டி தக்ஷணு
கண்மூடி மூர்த்தியாய் தவம்புரிந்தாண்டி
கண்ணிவன திருமலைக்காக—கடம்ப
கற்பூர நிழலினில் காக்ஷிதந்தாண்டி (உ)

ஆலகாலமுண்ட லிங்கம்—சோதி
ஆயிரத்து எட்டு இதழான லிங்கம்
ஆகமவுயிர்களுக்கெல்லாம்—உள்ளே
ஆடிடும் பரஞ்சோதி ஆத்துமலிங்கம் (உ)

ஆனந்த மெட்டு

[பூ] தில்லை நந்தனுருக்காக ஆனந்தமே
திருநடனம் காக்ஷிதந்தீர் ,,
காரைக் காலம்மையர்க்கு ,,
காட்சிதந்தாய் ஆலங்காட்டில் ,,
மார்க்கண்ட முனிவருக்கு ,,
மாறிடா வயதளித்தீர் ,,
மலையத்துஜ பாண்டியர்க்கு ,,
மருமகனுய் காட்சிதந்தீர் ,,
தாயாராய் வந்தல்லவா ,,
தான்கார்த்தீர் மருத்துச்சியாய் ,,
பன்றிக்குப்பால் கொடுத்த ,,
பரமரல்லவோ மாயாண்டி ,,

நாரைக்கு முத்திதந்த ஆனந்தமே
நாதராம் மாயாண்டி ,,
கருங்குருவிக்குபதேசம் ,,
கருத்தினில் உரைத்தவரே ,,
நீர் காக்கைக்கு வரம் கொடுத்தீர் ,,
காரைக் காட்டு அம்மையர்க்கு ,,
காட்டினுய் சிவலோகம் ,,
திருவள்ளுவ நாயனுர்க்கு ,,
திருநடனம் காட்டிநின்றீர் ,,
[ப] திருவள்ளுவ நாயனுர்க்கு

## அங்காளம்மன் விருத்தம்

[பூ] ஞாயிறு திங்கள் செவ்வாய்
நற்புதன் வியாழன் வெள்ளி
வெள்ளிக்கிழமையிலே
திருவேந்திர ஒளிகாப்பு
அன்னமிக சொரியுமங்கே
அகிலாண்ட ஈஸ்வரிக்கு
எங்கள் அங்காள பார்வதியே
இங்கே அடிமைகாவல் வந்துநில்லே
[ப] எங்கள் அங்காள பார்வதியே

## அங்காளம்மன் உற்பத்தி சுருக்கம்

கண் சிவந்து கோபித்தாளாம் அம்மன் என்ற மெட்டு

[பூ] ஆதிநல்ல கயிலேயிலே அய்யன்
ஆதிசிவன் கதியிருக்கும் போது
முப்பத்துமுக்கோடி தேவர்
முனிவர்படை சூழ்ந்திருக்க அங்கே
நாற்பத்து எண்ணுயிரம் சித்தர்
நவகோடி முனிவர்களும் சூழ
குண்டோதரன் குடையேந்தி நிற்க
குபேரனும் தான் பொக்கிஷத்தை தாங்க
அஸ்வத்தாமன் தம்புருவை மீட்ட
அதிகாரநந்திதேவர் கார்க்க

நாரதரும் வீணைமீட்டி பாட
நாட்டியங்கள் கூறி மாதர் ஆட
பிரிங்கிரிஷி மூன்றுகாலால் துதிக்க
பிரியமுடன் மாயன் தாளம் கொட்ட
ஆனைமுகன் ஆறுமுகன் ஆட
ஆகாய கெந்தர்வர் மலர் கொட்ட
அட்டதிக்கு பாலகர்கள் காக்க
அண்டரெல்லாம் அரகராவென பார்க்க
இப்படி இருக்கும் கைலை தன்னில்
இன்பமாக இருவர்களும் அங்கே
பரமனும் பார்வதியும் அங்கே
பரவிக் கொலுவிருக்கும்போது இப்போ

ப] ஆமாம் ஆமாம்

நையாண்டி

[பூ] அந்த சமயத்திலே அகமுடனே துர்வாசர்
அரனாரை நோக்கியல்லோ அன்புடனே ஏதுரைப்பார்
எனக்கொருவரமும்வேண்டும் என்றுரைத்தார் துர்வாசர்
எல்லாம் அருளிக்கும்சிவன் எதுவேண்டுமென்றுரைத்தார்
அந்தசேதி கேட்டல்லவோ அகங்கார துர்வாசர்
கோபத்திலே ஏழுமுழம் கொடுக்கவேணுமென்றுரைத்தார்
அந்தசேதி கேட்டல்லவோ அகங்கார துர்வாசர்
சினத்திலே ஏழுமுழம் சிவனாரே தாருமென்றார்
அப்படியே தந்தேனென்றார் அம்பிகை மனோகரனும்
சிவன்வரத்தை பெற்றல்லவா சினமாகவாறாரே
இப்படியாகவாறாரே இவரிருக்கும் சமயத்திலே
ஒருநாள் தன்னந்தனியே உலகளந்தோன் புத்திரனார்
சத்தியலோகமதில் சதுர்முகனும் வீற்றிருக்க
அந்தசமயத்திலே அகங்கொண்ட துர்வாசர்
பிரம்மன்சபைதனிலே பிரியமாக வந்துநிற்க
மறையோன் மதியாததால் மகாகோபம் கொண்டல்லவா
சாபங்கள் தந்தாரே சதுர்முகனார் பிரம்மனுக்கு
என்னசாபம் தந்தாரே எதிராக துர்வாசர்
பரமருட கரத்தாலே பஞ்சுசிரசு ஒன்றில்
ஒரு சிரசில்லியல்லோ ஒருமிக்க போவோமென்று

சாபமது தந்தாரே சாம்பசிவன் வரம் பெற்றவரும்
அந்தசாபம் தந்தல்லவா அதிவேகமாய் போய்நடந்தார்
இப்படியாகவல்லோ இருக்குமந்த நாளையிலே
(ப) ஆமாம் ஆமாம்

நொண்டி சிந்து

(பூ) கஞ்சனும் ஓர் தினத்தில் கர்த்தராம்
கண்மூன்றுடைய சிவன் தனைக்காண
கயிலைபதியேகிவர ஈஸ்வரி
கண்டாளே ஆதிசக்தி பிரம்மதேவனை
அந்தச் சமயத்தில் அம்மைவுமை
ஐந்துசிரம் இருப்பதால் சிவனென்று
திடுக்கிட்டு எழுந்திருந்து பிரம்மனுக்கு
அடிபணிந்து பூசித்ததுமே கோபமே கொண்டாள்
மறையோன் மிக நடுங்கி அம்மையே
மன்னிக்கவேண்டுமென மனம் கலங்க
சிவனும் வந்திடவே வுமையவளும்
சிரம்வணங்கி தெண்டனிட்டு கரம் குவிக்க
அளவில்லாக் கோபங்கொண்டு சிவபெருமான்
அட்சணமே பிரம்மன் சிரம்தான் கொய்ய
பிரம்ம ஹஸ்தி தான்பிடிக்க சிவனுக்கு
பித்துக்கொண்டு சுடலையெல்லாம் தான் ஆட
வுமையவள் கண்டுமங்கே அண்ணன்
வுலகளந்தோன் மாயனிடம் சேதி சொல்லவே
அவருடைய போதனையால் அன்னமிட
அம்பாளையும் பிடித்திட சாபமது
சிவனும் அம்பாளுமே இருவரும்
அண்டபிண்டம் யாவும் சுற்றி வலமாய் வந்து
வேகா சுடலைதன்னில் இருவர்
விளையாடி சுடலையில் நடனங்கொண்டார்
தினமும் தினதினமும்

கர்ந்தாரி ரூபமானள் அம்மன் என்ற மெட்டு

(பூ) கயிலைபதி தேடியம்மன் வரவே
கண்டாரே பரமசிவன் அங்கே

பெண்ணே பெண்ணே பார்வதியே கேளும்
பெருமையாக நானுரைப்பேன் கண்ணே
தானூழர் ராமநாத புரம்
தாஸ்டிகமாய் கூவத்தூரை சுற்றி
ஆலங்காடு குன்றத்தூரை சுற்றி
ஆதிசக்தி எருமை வெட்டி பாளையம்
சித்தமாம் பக்க வுய்ய நாடும்
சிறப்புடனே ராயபுரம் தங்கி
மலையனூர் ஏரியிலே வந்து
மல்லாந்து நீ படுப்பாய் பெண்ணே நீயும்
குழந்தை வுருகொண்டல்லவா நீயும்
குருபரியே நீயிருந்தால் வுன்னை
வலைவீசும் நாட்டினர்கள் கண்டு
வணங்கி உன்னை தானெடுத்து ஏந்தி
அங்கம்மா ளென்று சொல்லி உன்னை
அடிதொழுது தான் வளர்ப்பார் என்றார்
சிலகாலம் சென்ற பின்னால் நானும்
சிறப்புடனே மாலையது சூட
வந்து மணம் தான்புரிந்து பெண்ணே
வடிவுடையாள் உனையழைத்து செல்வேன்
என்றுரைத்தார் ஆதிசிவன் அங்கே
எதிராக பார்வதிக்கு அய்யன்

[ப] ஆமாம் ஆமாம்

கொம்மி மெட்டு

பத்தா சொன்ன மொழிதான் கேட்டு அம்மன்
பக்ஷமுடன் உலகில் பேர் விளங்க
பக்குவமாக பிரமன் மண்டை யேந்தி
பலதேசம் சுற்றியே வாராளே

கணவர் சொல் தட்டாத பார்வதியாளங்கே
பலிமீதில் பலவித நாமங்கொண்டு
கரத்தினில் சூலமும் கபாலமும் கொண்டுமே
கருத்த சடைவீசி ஆடி வாரான்

ஆங்கார சிங்கமதை அடக்கி அம்மன்
ஓங்கார சப்தமாய் முதுகேறி
ரீங்கார பிரணவ சொர்ப்பனத்தி லந்த
சிங்கார பீடத்தில் குடியமர்ந்தாள் 3

குடகுமலை கொச்சி ராமனுதபுரம் சுற்றி
குமரியாள் நல்ல பகவதியாள்
குடிபடை வாழும் மானிட மக்களை
குறைவின்றி பேர்வாங்கி தெய்வமானாள் 4

பொன்னேறி என்றிடும் மலையனூரில் அம்மன்
பொருந்தினாள் பேரீச்சமரத்தடியில்
பொல்லா வினைகளை தீர்த்துமே புற்றினுள்
பொய்சொல்லா மெய்யரை காற்றுவராள் 5

சமயநடை இரட்டைசீர்

[பூ] ஏரி என்னு அங்கம்மா ஏரியம்மா
இருகரையும் தாயே பொன்னேரி
தண்ணீர் வந்தா லங்கம்மா நிரம்பாது
தாழனூறு தாயே ஏரிகரை
ஏரிகரை அங்கம்மா மூலையிலே
பேரீச்சம் தாயே மரத்தடியில்
பேரீச்சம் அங்கம்மா மரத்தடியில்
போட்டமர்ந்தாள் ஆசனத்தை
ஆசனம் அங்கம்மாள் புலித்தோலாம்
அன்றமர்ந்த தாயே மான்தோலாம்
மான்தோலை அங்கம்மா தரித்தவளே
மாயாண்டி தாயே பத்தினியே
குட்டி நல்ல அங்கம்மா புலித்தோலாம்
கொடிவேங்கை தாயே ஆசனமாம்
புலித்தோலை அங்கம்மா தரித்தவளே
புனலணிந்தோன் தாயே பத்தினியே
கஞ்சளி தாயே தரித்தவளே
வர்த்த சிவன் அங்கம்மா பத்தினியே
சித்தாங்கம் அங்கம்மா தரித்தவளே
சிவனுருடை தாயே பைங்கொடியே

மாயிமருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] மாயாண்டி தேவியம்மா ஆனந்தமே
மாங்காளி அங்கமுத்து ,,
பேயாண்டி தேவியம்மா ,,
பேர்போன அங்கமுத்து ,,
காடு புகையுதம்மா ,,
காணுறு நின்றெறியும் ,,
சுடலை புகையுதம்மா ,,
சுடுகாடு நின்றெறியும் ,,
நடுச்சுடலை தில்லைவனம் ,,
தில்லை வனக்குயிலே ,,
திருநடன சுந்தரியே ,,
ஜெகஜால மோகினியே ,,
ஜெகத்திந்திராணிய ம்மா ,,
வேகா சுடலையிலே ,,
சாகாவரம் தந்தவளே ,,
சித்தாங்கம் கட்டியம்மா ,,
சத்தாங்கம் ஆடிவர ,,
அக்குமணி பூண்டவளே ,,
அங்காள வள்ளியம்மா ,,
கொக்கிறகு பூண்டவளே ,,
கொள்ளிமலை அங்கமுத்து ,,

அய்யேர் ஆனந்தமாட என்ற மெட்டு

[பூ] ஆதியில் அங்கமுத்து நடிக்க தேவ
ஆகாய முனிவர்கள் வேதங்கள் படிக்க
ஆதிமூலமாயன் மத்தளமடிக்க-தெய்வ
ஆனந்தமலையனூர் வாழ் அங்கு தாயே (ஆ)
சோதி சுடரொளி நீலி-கண்ட
சோமசுந்தரனுர் மகிழ்ந்திடும் காளி
சோதிப்பதேனம்மா தாயே-நீர்
சோபிதமாய் வரம் தந்துகார் நீயே (ஆ)
ஏனம்மா என்மீது ஜாலம்-இது
ஏங்காத வரம்தந்து காரம்மா நாளும்

ஏந்தி கபாலமும் சூலம்-இப்போ
ஏழையை காத்திடுவாயே இனிமேலும்
சடைதனில் லிங்கம் பதியாட-கொல்லா (ஆ)

சர்ப்பமது தோளினில் படமெடுத்தாட
சதுர்முகன் மண்டை கரமாட-தேவ
சர்வலோக எண்டிசை சரசமாட (ஆ)

காஞ்சி காமாக்ஷி நீயாக-மகன்
காத்தவராயர்க்காய் கம்பாவில் ஏக
தவம்புரி மரகத மீனுள்
தக்ஷிணுராயணி நீதான் அங்கம்மாள் (ஆ)

ஆதியில் அங்கமுத்து ஆட என்ற மெட்டு

[பூ] தந்தான தின சூலமேந்தினுள் அங்கமுத்து
அண்டபிண்டமான தேவதா மலையனூராள்
அகிலலோகமான தேவதா அங்காளவல்லி
ஜோதி நீதி ஆதி பர்வதா மலையனூராள்
சொக்கர் முத்தம் கொஞ்சும் நீலியே அங்காளவல்லி
சுடலைகரையில் பூஜைகொண்டவளாம் மலையனூராள்
சுந்தரிமிகு அந்தரியாளே அங்காளவல்லி
ஏனம்மா என்மீதில் கோபமா மலையனூராள்
ஏற்குமோ யிப்பாப தாபமோ அங்காளவல்லி
பிரம்மராக்ஷதர் எதிரிவாடவே மலையனூராள்
பிச்சாண்டி ரூபமானவள் அங்காளவல்லி
முன்னூறு சிங்கம் தன்னிலே மலையனூராள்
முதல்சிங்கம் முதுகிலேறினுல் அங்காளவல்லி
ஆங்கார சிங்கமேறியே மலையனூராள்
ஆடி சுடலைதேடி வாராளே அங்காளவல்லி
ஓங்கார சொரூபியானவள் மலையனூராள்
ரீங்கார சப்தமானவளாம் அங்காளவல்லி
மாண்டபிணங்கள் மாலையுண்டாளாம் மலையனூராள்
மார்பதக்கம் எலும்பு பூண்டாளாம் அங்காளவல்லி
வாயில்பிணத்தைகவ்விக்கொண்டாளாம் மலையனூராள்
வாதாடும் பேய்கள் சூழ்ந்தவளாம் அங்காளவல்லி

மலையனூரில் வாழ்ந்த நீலியே — மலையனூரான்
மச்சரதம் ஊர்ந்த காளியே — அங்காளவல்லி

## இரட்டை சீர்

[பூ] ஏரியென்ன என் அம்மா — ஏரியம்மா
[ப] ஏரியென்ன என் அம்மா — ஏரியம்மா
இருகரையும் தாயே — பொன்னேரி
தண்ணீர் வந்தால் தாயே — நிரம்பாது
தாழனூரை என் அம்மா — ஏரிக்கரை
மழைபொழிந்தால் தாயே — நிரம்பாது
மலையனூரில் தாயே — ஏரிக்கரை

## நையாண்டி

[பூ] ஏரிக்கரை யோரத்திலே — யீசான்யமூலையிலே
பேரீச்சம்மரத்தடியில் போட்டமர்ந்தான் — ஆசனத்தை
ஆசனம்புலித்தோலாம் — அன்றமர்ந்த மான்தோலாம்
குட்டி புலித்தோலாம் — கொடிவேங்கை ஆசனமாம்
[ப] ஆமாம் ஆமாம்

## ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] சித்தாந்தக் காரியம்மா — ஆனந்தமே
சிவனிடை பைங்கிளியே — ,,
முக்கண்ணுடையவளே — ,,
மூஷிகனை யீன்றவளே — ,,
தில்லை சிதம்பரத்தில் — ,,
திருநடனம் செய்தவளே — ,,
மகுடசங்காரியம்மா — ,,
மாங்காளி துர்க்கையம்மா — ஆனந்தமே

[பூ] தந்தானதின தானதானனு — தந்தானதான
தந்தானதின சூலம் ஏந்தினள் — அங்காளவல்லி
மட்டடங்கா சிங்கமேறிய — அங்காளவல்லி
மாங்காளி பயணங்கொண்டாளாம் — தந்தானதான
மாண்டார் எலும்பை பூண்டவள் — அங்காளவல்லி
மலையனூரில் வாழ்ந்துகொண்டவள் — தந்தானதான
காடுமேடு சுடலை ஆடினள் — அங்காளவல்லி
கருத்தசடையை விரித்துக்கொண்டாள் — தந்தானதான

## ஆனந்த களிப்பு

[பூ] தெய்வப்புரத்தரசே அங்கம்மா
தென்னண்டை மலையனூரில் தேவர்படை சூழ
கைப்பிரம்பு சித்தாங்க சூலம் அங்கம்மா
பக்கத்தில் வேல்முருகர் பாவாடையுனே (அ)

உந்தியில் உதித்தோன் சென்னிகிள்ளி
நந்தியில் ஊர்ந்தோன் கபாலமாயாக்கி
மந்திரப் பேய்களை அதட்டி அங்கம்மா
மாயாண்டி ஐயரும் தலைகுனிந்தாட (அ)

## விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை :

மாயாண்டி கூடவல்லோ தாயே தாயே
மணிவிளக்கில் வாங்களம்மா
பாவாடை கூடவல்யோ என் தாயே அங்கம்மா
பதிவிளக்கில் வாங்களம்மா
ஆரார் வரும்வேளை என் தாயே தாயே
ஆயியுட காவலிலே

[ப] ஆரார் வரும்வேளை

## நடை வேறு சந்தம்

[பூ] ஆத்தாளே வந்தமரும் அங்காள பார்வதியே
வேர்த்தாளோ வடிவழகி வேறுபடா மாமுகமோ
துலுக்கான மாரிமுத்தே துஷ்டருக்கு பெண்பிறந்தாள்
துடுக்கர் மடையரெல்லாம் துரும்பாக செய்தசக்தி
பாரளந்த மாரிமுத்தாம் பக்ஷம்வைத்து கார்க்கணுமே
ஊர்கார்க்கும் மாரிமுத்தே உத்தமியே வாடியம்மா
சமைந்தாள் சமையபுரம் சாதித்தாள் கண்ணபுரம்
கண்ணபுரி மாரிமுத்தே கட்டழகி வாடியம்மா
மலையாள தேசமெல்லாம் விளையாட பெண்பிறந்தாள்
வேணது உன்புகழு வெற்றிக்கொடி மாமுகமே
வாடியம்மா இந்தமுகம் வடிவா வடிவழகி
தேடியே நானழைக்க தேசாந்த மாரிமுத்தே
கோடி நமஸ்காரமம்மா கும்பிட்டேன் வந்தமரு

குழந்தையிங்கு கேட்கிறது கோவில்முன் கேட்கலேயா
எந்த முகமானாலும் ஏழைமுகம் வந்தமரு

[ப] எந்த முகமானாலும்

மலேயனூரில் அங்காள பரமேஸ்வரி பேரில் பாட்டு

[பூ] மலேயனூரில் குடியிருக்கும் தாயே
குடியிருக்கும்

[ப] ஆமாம் ஆமாம்
[பூ] மாயி உமை ஆனவளே தாயே
ஆனவளே

[ப] தேவதா தேவதா
[பூ] செங்கையினில் கற்பறையாம் தாயே
கற்பறையாம்

[ப] ஆமாம் ஆமாம்
[பூ] சிவனும் ஒருபுறமும் தாயே
ஒருபுறமும்

[ப] ஆமாம் ஆமாம்
[பூ] வீரபத்ரர் ஒருபுறமாம் தாயே
ஒருபுறமும்

[ப] ஆமாம் ஆமாம்
[பூ] ஐங்கரரும் ஒருபுறமாம் தாயே
ஒருபுறமாம்

[ப] ஆமாம் ஆமாம்
[பூ] கரத்தில் கபாலமுடன் தாயே
கபாலமுடன்

[ப] தேவதா தேவதா

வேறு நடை பாட்டு

[பூ] அக்கினி கபாலமுடன் ஆனந்தமே தாயே ஆனந்தமே
அங்காள ரூபமானாள் ,, ,,
பம்மை உடுக்கையுடன் ,, ,,
பார்முழுதும் முரசுகொண்டார் ,, ,,
சூலம் ஒரு கையில் ,, ,,
சுத்தமுன் கோலம்கொண்டார் ,, ,,

மேற்படி வர்ண மெட்டு

[பூ] கலியுகத்துக்கு தெய்வமானுள் தாயே
தெய்வமானுள்

[ப] தேவதா, தேவதா.
[பூ] காந்தாரி ரூபங்கொண்டாள் தாயே
ரூபங்கொண்டாள்

[ப] ஆமாம் ஆமாம்
[பூ] பொல்லாத தெய்வமானுள் தாயே
தெய்வமானுள்

[ப] தேவதா, தேவதா.
[பூ] அங்காள கோலம்பூண்டாள் தாயே
கோலம்பூண்டாள்

[ப] ஆமாம் ஆமாம்.

வேறு நடை பாட்டு

[பூ] பழிக்குப் பழிகொடுப்பாள் ஆனந்தமேதாயே ஆனந்தமே
பார்ப்பாத்திஎங்களம்மா ஆனந்தமேதாயே ஆனந்தமே
எங்கும்பரவிநின்ருள் ஆனந்தமேதாயே ஆனந்தமே
மங்குமருளியம்மா ஆனந்தமேதாயே ஆனந்தமே
துஷ்டரைக் கருவருப்பாள் ஆனந்தமேதாயே ஆனந்தமே
இஷ்டங்கொண்டு காத்திடுவாள்
ஆனந்தமே தாயே ஆனந்தமே

வர்ண மெட்டு

[பூ] நல்லவர்க்கு நல்லதெய்வம் தாயே
நல்லதெய்வம் தாயே

[ப] ஆமாம் ஆமாம்
[பூ] கோபம்கொண்டாள் தாளமாட்டாள் தாயே
தாளமாட்டாள் தாயே

[ப] தேவதா, தேவதா
[பூ] கோபாலன் தங்கையிவள் தாயே
தங்கையிவள்

[ப] ஆமாம், ஆமாம்.

[பூ] கோரினர்க்கு வரமளிப்பாள் தாயே
வரமளிப்பாள்

[ப] தேவதா, தேவதா.

[பூ] குற்றமில்லா எங்கள் தெய்வம் தாயே
எங்கள் தெய்வம்

[ப] ஆமாம் ஆமாம்.

[பூ] இஷ்டங்கொண்டாள் கார்த்திடுவாள் தாயே
கார்த்திடுவாள்

[ப] தேவதா, தேவதா

### வேறு நடை பாட்டு

[பூ] எல்லோரும் தான்படிக்க ஆனந்தமே தாயே
,,

கள்ளமில்லா தேவின் கவி ,, தாயே
,,

குற்றம் குறையிருந்தால் ,, தாயே
,,

குழந்தையை கார்க்கவேணும் ,, தாயே
,,

### மதுரைவீர சுவாமி உற்பத்தி

செந்தமிழ் உலகினில் என்ற மெட்டு

முத்தமிழ் தென்மதுரை மீனுக்ஷி ஆலயத்தில்
முன்மேடை காவல் செய்பவர் முத்துவீரய்யா
முன்மேடை காவல் செய்பவா

பார்புகழ் காசியை ஆண்டிடும் மன்னனும்
பண்ண தவத்தினுல் பாலனுய் தோன்றியே

வந்த மஹானுபாவனே—வனத்தில் விட
வருந்தியமுத லோலனே (மு)

கம்பைமா நகர் வாழும் காலஞ்சென்ற தேமாயி
காட்டினில் கண்டெடுத்த—வீரய்யனென
கனத்த பெயர் தரித்திட

கடுஞ்சினமாகவே காட்டினிலேகியே
கரடி புலி சிங்கம் கதறியடித்தவா

காளிவரங்கள் பெற்றவா காவல்முனியை
கழுத்தை யறுத்துக் கொன்றவா (மு)

பொழுமா நகராளும் பொம்மண நாய்க்கன் மகள்
பொம்மியை சிறைகொண்டவா—பொழுது மறைய
போர்க்களம் வெற்றிக் கொண்டவா

கன்னிகை பொம்மியும் கண்டுமே தந்தையே
கலங்கியதுமே கருமம் முடித்திட

சென்று திருச்சிதேடியே—வேந்தனிடத்தில்
சேவகம் செய்தாய் நாடியே (மு)

மன்னன் விஜயரங்கம் மனதுகோணுமல் நீயும்
மாளாத கள்ளர் படையை—மடியவைத்து
மன்னர்க் குறைத்தீர் சேதியை

கட்டாணிமுத்தரும் கன்னிகை பொம்மியும்
கம்பைநாய் புரவியும் கலக்கமிலாமலே

கலந்து சுகித்து வாழ்ந்திட—திருமலையன்
கண்டு லிகிதமெழுதிட (மு)

கனம்பெற்ற ரகுனுதா மன்னரே இப்பொழுது
கணக்கற்ற கள்ளர்கூட்டமே—கொடுந்துயரம்
கண்டுபிடிக்கவேணுமே

இந்த லிகிதம் கண்டதும் யிக்ஷணம்
இணையில்லாமலே யிருக்கும் காவலர்

ஆணிமுத் தய்யனை நீறும் அனுப்பிவைத்தால்
அனைவர் குறைகளும் தீரும் (மு)

வருந்தி யெழுதும் சேதி வாசித்து விஜயரங்கம்
வாரும் வீரய்யபாண்டியா—மருதை நகர்
காரும் வீரய்ய பாண்டியா

பலவித படையுடன் பாவை பொம்மியும்
பல்லக்கிலேறியே பனிமீதில் வந்து

பாண்டியன் வந்திறங்கவே—வைகை நதியில்
பலவித சப்தம் முழங்கவே (மு)

கண்டான் திருமலையன் கனத்த முழக்கமதை
கலங்கி மனதுவேர்த்துமே—அமைச்சனையும்
காஷாயம் தரித்து கண்டுமே

விரைந்து க்ஷணத்தில் வீரய்ய னென்றுமே
விரைவாய் சேதி வீரிட்டுரைத்திட

பலவித ஆரவாரமாய் பாராளும் மன்னன்
பல்லக்கிலேற்றி வேகமாய் (மு)

அய்யனைக் கொண்டுவந்து அதிபதியாக வல்லோ
அமர்த்தியே வாழும் நாளையில்—அநேகம் கள்ளர்
அரண்பதியே சேர்ந்தார் வாளினுல்

அருகினில் வெள்ளையும் ஆலம் ஏந்திட
அழகு வீரய்யனும் அம்மையைக் கண்டிட

ஆவலாய் சிறையெடுத்திட—ஆட்கள் கண்டு
ஆண்டவன் கால்கை வாங்கிட (மு)

மீனும்பிகைவரத்தால் மனந்தளர்ந்து மன்னன் வருந்த
மீண்டும் வளர்ந்து நீருமே—மீனுடசி கோவில்
மின்மேடை கார்த்தார் பாருமே

அண்டரும் தேவரும் அனைவர் தொழுதிடும்
அம்மை மீனும்பாள் அரும்பலி ஸ்தம்பம்

அன்பாய் கார்த்திட்டாய் நீறுமே—சமய சபை
அ-கனக சபையைக் காருமே (மு)

அன்னவர் புத்திரராம் அ-க-ஷண்முக நாயகர்
அவர் மாணவன் சத்திவேலனும்-அடியன் மீதினில்
அருந் தமிழோதினேன் நானும்

ஆணிமுத்தையுன் அருங்கவி பாடிட
அதில் பிழையாகிலும் ஆதரித்துமே

முற்றுமுணர்ந்து நீருமே-சமய சபை
முழுதும் விளங்கபாருமே (மு)

## ரேணுகா பரமேஸ்வரி உற்பத்தி

(பூ) நையாண்டி

ஆதியும் பவனின்ற அருதலை வுப்பைதன்னை
அந்தவூர் வாழுகின்ற அன்பான வண்ணார்கள்
கண்டெடுத்துதான் வளர்த்து கலகமது தான்நேர்ந்து
வர்மராஜன் தன்னிடத்தில் வந்து கொடுத்தார்கள்
அன்றுமுதல் ரேணுகையாய் அன்பாய் வளர்ந்து வாராள்

வசனம்

ஆதிவோர் நாளையில்-மாயனும் வேதனனும் சண்டையிட்டு, அதனால் சாபம் நேர்ந்து கலியுகத்தில் வந்து பிரம்மனும் சரஸ்வதியும் ஏழுபிள்ளை ஈன்று பிரம்மலோகம் சேர்ந்த பிறகு அதிலொரு குழந்தை வுப்பையை அரசன் எந்தவிதமாக வளர்ப்பாளென்றுள்.

பூசாரியின் சமய நடை

(பூ) ரேணுகை என்று சொல்லி மன்னன்
பூரணமாய் பேருமிட்டு அங்கே
தோள்மீதில் ஏணைக்கட்டி மன்னன்
துடைமீதில் நடைபழக்கி அங்கே

நாளொரு மேனியாக மன்னன்
நாதாந்தியை தான்வளர்த்து வாருன்
இப்படிக்கு தான் வளர்த்து அம்மன்
இருக்குமந்த நாளையிலே அங்கே
பன்னிரண்டு பிராயமதி லம்மன்
பருவதிசை தானடைந்தாள் அங்கே
புஷ்பவதி யாகியல்லோ அம்மன்
சிவபூஜை செய்யலுற்ருள் அங்கே

## குறவஞ்சி மெட்டு

(பூ) இப்படி இருக்கையிலே இன்பமுடன்தானும்-அங்கே
இன்பமுடன் தானும் இன்பமுள்ள நாரதரும்
இறங்கிவந்து புவியில்
பிருகுரிஷிமைந்தனுன ஜெபதக்கினி தபசில் அங்கே
ஜெபதக்கினி தபசில் பிரியமுடன் வந்து நின்று
புகலுகிருர் அப்போ

## வசனம்

மகா விஷ்ணுவுக்குப் பத்துதரம் ஜெனனமாகும்படியாய் சபித்த-பிருகு ரிஷியின் மைந்தனுன, ஜெமதக்கினி முனிவர் முன்வந்து ஏதுரைப்பாரென்ருல்,

## கும்மி

(நா) ஆனுல் கேளும் ஜெமதரிஷி உனக்
கானமங்கையை கண்டுவந்தேன்
உன்மனம் போலாக தானடப்பாள் அந்த
உத்தமியை மாலையிட்டு வாரும்

(ஜெ) என்றுவுரைத்திட நாரதரும் அப்போ
எதிர்நோக்கி முன்னே நமஸ்கரித்து
என்பால் கருணைகொண்டு வந்ததால்
எடுத்துரைப்பேன் பதில் கூறுமய்யா

ஓட்டம் பெருநடையாய் என்ற மெட்டு

அய்யா ஓய் நாரதரே அன்பாய் வுரைக்கிறேன் கேள்
அவள் பிறப்பு வளர்ப்புகளை அறிய வுரைத்தீராகுல்
உன்மனம் போலாக உகந்துமனம் கொண்டிடுவேன்
என்று உரைத்தாராம் எழிலான நாரதர் முன்
அப்போது நாரதரும் அறையலுற்ருர் மாமுனிக்கு
அம்மனுட தன்சமர்த்தை அன்பாய் வுரைக்கலுற்ருர்

நொண்டி சிந்து

ஆதி வைகுந்த மதில்-அந்த அயனுன கஞ்சனுக்கும்-மாயனுக்கும்-அண்ட மதிரும்படியாய்-கடும்போர் நடந்து அண்ணுமலையார் முன்னெழுந்து வேதனுக்கு சாபம் தந்து-அப்போ பிரம்மனும் சரஸ்வதியும்-புவிமீதில் மறு ஜென்மம் தானெடுத்து-புவிமிசை ஏழுபிள்ளை ஈன்றெடுத்தார். மண் மீதில்-அதிலொரு பெண்குழந்தை வர்ம ராஜன்-மனைதனில் தான் வளர்ந்து வரலுற்ருள்-அவளை விவாகம் செய்தால்-அவனியில் கீர்த்தியுண்டு யுகம் மறையும்வரை-இது சேதி நானுரைத்தேன்-இனிமேல் நடக்கும்-காரியத்தை முடியு மையா-என்றுரைத்தார் நாரதரும்.

(தினனும் தினதினனும்)

பூசாரியின் சமய நடை

அப்போது ஜமதக்கினி அன்புடனே தானெழுந்து
நாரதர் மாமுனிக்கு நமஸ்காரம் செய்துநின்று
அப்படியே நல்லதென்று அரசனைக் காண்பதற்கு
இருவரும் வொன்ருக இன்பமாய் வாருர்கள்
ஊத்தங்காட்டு மன்னனிடம் உத்தமர்கள் வாருர்கள்
அரசன்மனை தேடிவந்து அன்பாக நின்ருர்கள்
காவலரை தானழைத்து காணும்படி உத்தரித்து

அரசன் வரவைக்கண்டு அரண்மனைக்குள் புகுந்தார்
அப்போது அரசனர் அமர்த்தினர் இருவரையும்
இருவரையும் தானமர்த்தி இருந்து நமஸ்காரமிட்டு
அடிமையைத் தேடிவந்த அருஞ்சேதி யுரையுமென்று
உங்கள் பதம் காண்பதற்கு உத்தமன் புண்ணியம்செய்தேன்
தேடிவந்த காரியத்தை தெரியவுரையுமென்றுன்
அப்போது நாரதரும் அரசனுக் கெடுத்துரைப்பார்

### வசனம்

அய்யா வேந்தனே! பிருகுரிஷியின் மைந்தனை ஜெமதக்கினி மாமுனியும் இவர்தான் தவத்தில் மிகுந்தவர் இவருக்கு உன் புத்ரியை மணம் செய்யவேண்டி கேட்க நாடி வந்தேன் என்று உரைக்க.

### சமயநடை பாட்டு

அப்போது வேந்தனுந்தான் அங்கம் மிக குளிர்ந்து
உங்கள்மனம் போலாக உத்தமியை தாரேனென்று
புரோகிதரை தானழைத்து புத்திரிக்கு நாள்பார்த்து
சித்திரை மாதத்திலே சிறப்பான கல்யாணம்
செய்து முடித்தாரே செழிப்பாக இருவருக்கு
அனைவர்கள் தானறிய அன்பாய் முடித்தாரே
ஐந்துநாள் கலியாணம் அழகாய் முடிந்த பின்பு
அவரவர் தன்பதிக்கு அனைவர்களும் சேர்ந்தார்கள்
இப்படியாகவல்லோ இருக்குமந்த நாளையிலே
வேந்தனை நோக்கியல்லோ வெறுப்பாக ஜெமதரிஷி
ஐயா ஓய் வேந்தனே அரண்மனை கூடாதய்யா
தனி விடுதி நந்தவனம் தருகவேணும் எங்களுக்கு
இனி இருக்கமாட்டோமென்று இயம்பினர் ஜெமதரிஷி
அப்போது அரசனுந்தான் அவர் மனம் கோணுமல்
தனிவிடுதி நந்தவனம் தந்தாலும் இருவருக்கும்

அப்போது ஜெமதரிஷி    அன்பான ரேணுகையும்
ஆளனும் தேவியுமாய்    ஆண்டுவாரார் அவ்விடத்தில்
இப்படியாகவல்லோ    இருக்குமந்த நாளையிலே
நான்குபிள்ளை ஈன்றெடுத்தார்    நலமாக இருவர்களும்
ஒருவன்பேர் அனுவனுமே    ஒருவன்பேர் கனுதனுமே
மற்றொருவன் விஸ்வாதி    மண்டலத்தில் ஈன்றெடுத்து
நான்காவது மகன்தான்    நலமான பரசுராமன்
இப்படிக்கு நான்குபிள்ளை    ஈன்றெடுத்து வாழ்ந்துவர
ஆளவந்த ஜெமதக்கினி    அரன்பூசை செய்வதற்கு
மனையாளை தானழைத்து    மன்னவரேதுரைப்பார்
கங்கைகொண்டு வரும்படியாய்    கட்டளைகள் தானுமிட்டார்
இப்படியாக அம்மன்    இன்பமாக கொண்டுவர
ஓர்நாள் தினத்திலேதான்    ஓவியமாய் கெந்தர்வனும்
ஆகாயம் பரந்துவர    அவனழகைக் கண்டாளாம்
அழகை நினைத்ததினால்    அம்மையந்த ரேணுகைக்கு
கங்கையது கூடவில்லை    கன்னியந்த ரேணுகைக்கு
கலக்கமது கொண்டாளாம்    கணவரை நினைத்தாளாம்
இந்த குற்றம் செய்தேனே    ஏது சாப மீய்வாரோ
ஏதுமறியேனென்று    ஏங்கி புலம்புகையில்
அப்பொழுது ஜெமதக்கினி    அரிவையைக் காணோமென்று
அஞ்சனம் போட்டுமல்லோ    ஆராய்ந்து சேதிகளை
பரசு நல்ல ராமனையும்    பக்குவமாய் தானழைத்து
உன்தாயார் ரேணுகையும்    பதிகுலைந்தாள் கெந்தர்வனால்
ஆதலால் உன்தாயை    அறுத்தெரிந்து வாருமென்றார்
பட்டாவைத் தானேந்தி    பாலனான பரசுராமன்
தாயாரைக் கொல்வதற்கு    தானோடி வாரானங்கே
கண்டாள் ரேணுகையும்    காளை வருகிறதை
ஓட்டம் பெருநடையாய்    ஓடிவந்தாள் சேரியிலே
அபயக்குரல் கேட்டாராம்    அன்பான சக்கிலிமார்
அஞ்சாதே தாயேயென்று    அம்மனை ஒளியவைத்தார்

அப்போது பரசுராமன் அதிக கோபங்கொண்டுமல்லோ
சக்கிலி குடிசைகண்டு சங்கரித்தான் அனைவரையும்
தாயாரந்த ரேணுகையை தானறுத்தான் பரசுராமன்
தலையை அறுத்தானும் தவம்பெற்ற பரசுராமன்
கத்தியை தானலம்பி காளையவன் ஓடிவந்து
தகப்பனிடம் சேதிசொல்லி தக்ஷணமே தெண்டனிட்டான்
மறுநாள் காலையிலே மாராட்டம் கொண்டானும்
பிரம்மத்தி கொண்டானும் பிள்ளையந்த பரசுராமன்
அப்பொழுது கண்டாராம் அய்யனந்த ஜெமதரிஷி
என்னவரம் வேண்டுமென்று ஏறிட்டு கேட்டாராம்
அப்போது பரசுராமன் அன்னையை தானெழுப்பி
தருகவரம் கேட்டானும் தகப்பனையும் பரசுராமன்
அப்படியே தந்தேனென்று அன்பாய் விபூதிதந்தார்
விபூதியைக் கையெடுத்து விமலனந்த பரசுராமன்
மாறுடலாய் தாயாரை மகனும் தான்சேர்த்து
அனைவர்மீதும் தூவினாராம் அப்பனுடவெந்நீரை
எப்போதும் போலாக எழுந்தார் அனைவர்களும்
தாயாரை தானடத்தி தகப்பனிடம் சேர்ந்தாராம்
இப்படிக்கு இருக்கையிலே இனிநடக்கும் விபரமதை
உரைத்திடுவேன் தன்சபையில் உத்தமியாள் தன்சமர்த்தை
தாயார் விளையாட்டை தவமழகன் நானுரைப்பேன்

வசனம்

ஓர்நாள் தினத்தில் ஜெமதக்கினி மாமுனிவர் தன் மனையாளைப் பார்த்து, உடல்மாறுபாடாக இருப்பதினால், இனி என் அண்டையில் கூடாதென்றுரைக்க அப்போது ரேணுகை கேட்கலுற்றாள்,

ஆங்கார ரூபமானாள் என்ற மெட்டு

நான் பிழைக்கும் வகையதனை மன்னு
நாயகரே வுரையு மென்றாள் அங்கே
அப்போது ஜெமதக்கினி கண்டு
அரிவைக்கு ஏதுரைப்பார் அங்கே

ஏழுமுத்து வோதிதாரேன் பெண்ணே
ஏகிநீயும் பிழைத்திடுவாய் என்ருர்
மித்தினிட சோதனையாய் சுவாமி
உத்தமியாள் நானறிய வென்ருல்
அப்பொழுது ஜெமதக்கினி அங்கே
எடுத்துதறியும் எந்தன்மீதில் என்ருர்
அப்படியே தூவினுளாம் அம்மன்
அதிகபாதை கொண்டாராம் அய்யர்
உந்தன் முத்து தாளவில்லை பெண்ணே
உத்தமியே இறக்குமென்ருர் அங்கே
கேட்டாளாம் ஆளன்சொல்லை அம்மன்
கிருபையுடன் ஏதுரைப்பாள் அங்கே
நான் கேட்கும் வரம்கொடுத்தாள் நாதா
நாயகியாள் இறக்கிடுவேன் என்ருள்
தட்சணமே என்ன வரம் வேணும்
தாரேனடி என்றுரைத்தார் அங்கே
நால்வர் லோகம் சென்றல்லவா நாதா
நான் முத்தளக்க வேணும் என்ருள்
அப்படியே தந்தேனடி பெண்ணே
அளித்த முத்தை நீயிறக்கும் என்ருர்
அந்த முத்தை தானிறக்கி அம்மன்
அரனுரிடம் வந்துநின்ருள் அங்கே
ஈசருக்கு முத்தை தூவி நின்று
யிருக்கையிலே கண்டாராம் சிவனும்
பாதையது தாளவில்லை என்று
பகரலுற்ருர் அப்பொழுது அரனும்
நான் கேட்கும் வரமளித்தால் சுவாமி
நாயகியாள் இறக்கிடுவேன் என்ருள்
அப்பொழுது ரேணுகையும் அரனுரை கேட்கலுற்ருள்

பாற்பசுவும் சூலமதை பரமரே தாருமென்ருள்
அப்படியே தந்தாராம் அரனுரும் அம்மையர்க்கு
முத்திரைக் கொண்டல்லவா வைகுந்தம் தேடிவாருள்
மாயனுக்கு முத்தளந்து சங்கு சக்கரம் பெற்ருளாம்
பிரமனுக்கு முத்தளந்து ஏதுரைப்பாள் அம்மனுந்தான்
நான் அளக்கும் முத்தினர்க்கு நாள் முடிவு ஆனுலுமே
என்பழி நேராமல் எழுதிவைப்பாய் மானிடர்க்கு
நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வியாதிகளில்
மாரியென்று வியாதிதன்னை மாற்றி எழுதுமென்று
உத்திரவு பெற்றுக்கொண்டு உத்தமியாள் முத்திறக்கி
எமனுடைய சோதனையில் எடுத்தெறிந்தாள் முத்துதன்னை
எமனும் பொறுக்காமல் எருமாடு காவுதந்தான்
பாசக்கயிர் கொடுத்தான் பராபரியாள் மாரியற்கு
இத்தனையும் பெற்றுமல்லோ இறக்கினுளாம்பூலோகம்

## விளக்கின் வர்ணிப்பு

[பூ] வசன நடை :—

ஆரணியாம் பாளையத்தில்
அமர்ந்தாளாம் ஆலயமாய்
அண்ணன்மார்கள் புடைசூழ
அம்மை கொலுவாளுள்
மக்களையும் காப்பதற்கு
மாதா கொலுவாளுள்
அறியாதோன் பாடிநின்றேன்
அகலாமல் காருமம்மா
போற்றி நல்ல போற்றியம்மா
பொன்னடிக்கு தான்போற்றி

## 1, 2 முக்கிய கவனிப்பு

பூசாரிகள் நம்பர் குறித்த பிரகாரம் பாடிவிட்டதும், பம்பைக்காரர்கள் உடனே ஒவ்வொரு அடிக்குந் தந்தா னத்தின தானதானனே என்று பாடினுல் கேட்போருக்கு அலங்காரமா இருக்கும் கவனிக்கவும்.

### வேம்புலி அம்மன் பேரில்

1. தந்தாநத்தின தானதானனே
தந்தான தான
தானதந்தின தானதானனே

2. ஓங்காரமாய் தானமர்ந்தாளே வேம்புலிதாயார்
ரீங்காரமாய் தானுகந்தாளே (த)

வேங்கை புலிமீது கொண்டாளே ஈஸ்வரியாள்
வேனவரம் தானளிப்பாளே (த)

திரிகாளி அம்மனுடனே பராசக்தி
துரிதமுடன் தானுகந்தாளே (த)

பாவாடை வீரமுத்தாமே எழுவருமே
படைமன்னர் அண்ணருடனே (த)

பூஜைமுகம் கொலுவில் வந்தாளே வேம்புலியும்
ஆசைகொண்டோர் நேசம் கொள்வாளே (த)

எல்லே காவல் கொண்ட சத்தியாம் எனது தாயார்
சல்லே எல்லாம் போக்கிடுவாளாம் (த)

கள்ளமில்லா தேவன் கலியாள் கலியுகத்தில்
கண்கண்ட தெய்வமானுளே (த)

[ப] தந்தாநந்தின தானதானனே.

ஐயே ருனந்தமாட என்ற மெட்டு

ஐயே ருனந்தமாட என
தம்மாளும் பூங்காவனத்தாளுமாட
மல்லிகைப் பம்பையும் தட்ட ஆயி
மனப்பந்தல் வாசலிலே நடனங்கொண்டாட (ஐ)

வீரமுத்து வுமையவளாட நல்ல
வீரமுத்து பாவாட ருயரும் கூட
காத்தமுத்து அண்ணருமாட மாது
கன்னியம்மாள் பூவாடை களித்துக்கொண்டாட (ஐ)

சண்டாள துஷ்டர்களாட வேம்புலி
சதுரங்கமாடிவாருள் திருக்காளியோட
ஓங்கார ரீங்காரம் கொள்வாள் தாயார்
ஆங்காரம் கொண்டோரை அலறிஓட (ஐ

எல்லைக்கு எல்லையெல்லாம் நின்ருள் சக்தி
ஏகாந்த ரூபமாய் எங்கும் விளையாட
பொங்கும் பூசை கொள்ளவே தாயார் எல்லை
பங்கம்பழி இல்லாமல் காத்திடுவாளம்மன் (ஐ)

வருடா வருடங்கள் தோறும் பூசை
வாங்குவாள் யாரும் களித்துக் கொண்டாட
எங்கும் குல தெய்வமானுள் தேவி
எல்லோரும் கொண்டாட தேவன் கவிபாட (ஐ)

[பூ] வசன நடை:—

வேம்புலி தாயாரே எழுந்தாயா தீபமதில்
வேங்கை புலிவிட்டு மெல்ல

அண்ணன்மார் சேனையுடன் என்தாயே
அடியார்கள் முன்பாக

பூசையை கண்டதுமே வேம்புலி
பொங்குமம்மா பூவிளக்கில்

நாகம்போல் சீரியல்லோ தாயாரே
நடனங்கொள்ளும் வேளையிங்கே
எல்லோரும் தானறிய மாதாவே நீ
எழுந்தாயா தீபமதில்

ப] எல்லோரும் தானறிய

[பூ] தந்தானத்தின தானதானனே தந்தானதான
தானதந்தின தானதானனே தந்தானதான
அலரியலரி கிளிகள் பறக்குதே சோலைக்குள்ளே
ஆத்தாளுமே புறப்பட்டாளாமேதனதந்தினு தினதந்தினு
பாதசிலம்பு கதரிட யெழுந்தாள் பரமேஸ்வரியும்
பாலன் சொல்லை கேட்டதும் வாருள்
தனதந்தினு தினதெப்தினு (த)

சடைகுலுங்க வேகத்தில் நின்றுள் மாளிகையுள்
சீக்கிரமாய் தான்உகந்தாளே தனதந்தினுதினதெந்தினு
ஓங்காரமாய் தானமர்ந்தாளே பதிவிளக்கில்
ரீங்காரமாய் வந்துநின்றுளே தனதந்தினுதினதெந்தினு

[பூ] ஐய்யேரானந்தமாட என
தம்மாளும் பூங்காவனத்தாளுமாட
மல்லிகை பம்பையும் தட்ட ஆயி
மணப்பந்தல் வாசலிலே நடனம் கொண்டாட (ஐ)

ஆதியுட சிவனுமே ஆட நல்ல
ஆங்கார ஓங்கார சந்தத் தமிழ்பாட
ஓம்ரீம் அவ்வு சவ்வுச்சாட எங்கள்
உத்தமியும் கேட்டுயிதை உகந்துமே ஆட (ஐ)

காத்தமுத்து பாவாடை யென்னும் இன்னும்
கன்னியம்மாள் பூவாடையும் வந்துவிளையாட
கணமுத்து மதுரை துரையாட நல்ல
காமாக்ஷி மீனும்பிகை கண்டு களித்தாட (ஐ)

எல்லையெல்லாம்நின்ற பராசக்தி ஆயி
சல்லையெல்லாம் போக்குவாளே இத்தருணம் நத்தி
கள்ளமில்லா எங்கள்குல ஆதி சுடலை
கானகத்தில் நடனங்கொண்டாளே மிகஜோதி (ஐ)

பழிக்காரி மாரியென்று சொல்லுவார் பொல்லா
பாண்டியனை கொன்றிடவே காளி வேடமானாள்
ரத்தபலி ரணவீரகாளி ஓம்ஓம்
இத்தலத்தில் பழிவாங்க அமர்ந்தாளே நீலி (ஐ)

பல்லும் பலருமே வேண்ட ஆயி
பாலயத்தி லமர்ந்தாளே வடபத்திர காளி
கொள்ளை கொள்வாள் மாரிமுத்து ஆயி அம்மன்
கோபம்கொண்டாள் தாளமாட்டாள் சாபமிடுவாளே

[ப] ஐயே (பாட்டு முடிவு)

## கும்மி வர்ண மெட்டு

[பூ] கும்மிடுவாள் அம்மன் கும்மிடுவாள்—நல்ல
கொண்டை குலுங்கவே கும்மிடுவாள்
அண்டம் இடியும் இடியுமின்ன—எங்கள்
ஆத்தாள் குனிந்துமே கும்மிடுவாள் (கு)

கேட்டவர் யாவர் களித்திடவே—அம்மன்
கேளிக்கையாகவே கும்மிடுவாள்
பார்த்தவர் யாவர் திடுக்கிடவே—இந்த
பைங்கொடியாள் நல்ல கும்மிடுவாள் (கு)

வந்தமனையில் வரம்கொடுப்பாள் பொல்லா
நொந்த பிணிகளை போக்கடிப்பாள்
சிந்தை மகிழ்ந்துமே ஆடலுற்றாள்—இங்கே
சிக்கனமில்லாமல் காத்திடுவாள் (கு)

துஷ்டர்க்கு துஷ்டகுணசூலி—பொல்லா
துரோகிகளை கண்டால் பலசாலி

ஆட்டிப்படைத்திடும் எங்கள் ஆயி—சென்னை
ஆரணியில் நின்ற பேமாயி (கு)

## வேறு நடை சத்தம்

[பூ] ஆரணி நல்ல பாளையமாம் தாயே பாளையமாம்
ஆத்தாளங்கு குடியிருப்பாள் அம்மன் குடியிருப்பாள்
ஆராப்பெருமணலாம் அங்கே பெருமணலாம்
அதிகாரி வீற்றிருப்பாள் அம்மன் வீற்றிருப்பாள்

[ப] ஆராப் பெருமணலாம்

## வேறு நடை பாட்டு

[பூ] ஆயிரங் கண்ணுடையாள் ஆனந்தமே
தாயே ,,
பதினாயிரங் கண்ணுடையாள் ,,
தாயே ,,
போட்ட முத்து கொப்பளிக்க ,,
தாயே ,,
பொல்லாத மாரி ஆயி ,,
தாயே ,,

## மேற்படி பாட்டு

நெஞ்சுருகி போகுதம்மா தாயே போகுதம்மா
நாவினிலே தைத்த முள்ளு தாயே தைத்த முள்ளு
மார்பினிலே தைத்த முள்ளு தாயே தைத்த முள்ளு
மார்புருகி போகுதம்மா தாயே போகுதம்மா

## வேறு நடை பாட்டு

பத்துபலம் கொண்டதொரு ஆனந்தமே
தாயே ,,
பாரளந்த முத்தாமே ,,
தாயே ,,

## மேற்படி பாட்டு

தட்டை அம்மை மாரிமுத்து — தாயே மாரிமுத்து
கொட்டு மெல்ல விஷநாகம் — தாயே விஷநாகம்
பயிரம்மை மாரி தாயாம் — அம்மன் மாரி தாயாம்
பாம்பை போல கடிவிஷமாம் — தாயே கடி விஷமாம்

## வேறு நடை பாட்டு

[பூ] போட்டமுத்து யிறக்குவாளாம் — ஆனந்தமே
தாயே ,,
போக்கிரியைக் கருவருப்பாள் ,,
தாயே ,,
துஷ்டரைக் கருவருப்பாள் ,,
தாயே ,,
துர்க்கையுள்ள மாரிமுத்தாம் ,,
தாயே ,,

## மேற்படி பாட்டு

[பூ] நல்லவர்க்கு நல்லவளாம் — தாயே நல்லவளாம்
நாகத்தின் கண்ணுடையாள் — தாயே கண்ணுடையாள்

[ப] ஆமாம் ஆமாம் (பாட்டு முடிவு)

## மணப்பாக்கம் கன்னியம்மாள் பேரில் பாட்டு

ஊர்பேர் மணப்பாக்கம்—தாயே
உத்தமிபேர் கன்னியம்மாள்
நாடுபேர் மணப்பாக்கம்—தாயே
நாயகிபேர் கன்னியம்மாள்
ஆராறு கூடியம்மா—தாயே
அணையுதம்மா பாலாறு
ஏழாறும் கூடியம்மா—தாயே
இணையுதம்மா பாலாறு

பாலாற்றங் கரைதனிலே—தாயே
பத்தினியாள் கோவில் கொண்டாள்
அக்காளுந் தங்கையரும்—தாயே
ஐந்துரெண்டு ஏழுபேராம்
ஒக்கவுறவாடி நீங்கள்—தாயே
வுத்தமிமார் வாங்களம்மா

[ப] ஒக்கவுறவாடி

இல்லிடத்து கன்னியம்மன் பேரில் பாட்டு

[பூ] ஆடைகட்ட தாயே அறியாத
அரன்பாதம் தாயே சேர்ந்த கன்னி
சித்தாடை தாயே கட்டறியாள்
சிவன்பாதம் தாயே சேர்ந்தகன்னி
அரைநாழி தாயே கொள்ளையிலே
அரன்பதியை தாயே சேர்ந்தகன்னி
வளர்த்தநல்ல தாயே அருமையென்ன
வரிசைதந்த தாயே நேர்த்தியென்ன
வளர்த்ததாய் தாயே தேடுதம்மா
வாங்களம்மா தாயே பூமுடிக்க

மாயிமருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] பூபோட்டு நீர்தெளிக்க ஆனந்தமே
பூமுடிக்க வாங்களம்மா ,,
தூங்கும் சமாதிவிட்டு ,,
துள்ளி எழுந்திரம்மா ,,
வாழ்ந்த மனைதேடி ,,
வாங்களம்மா கன்னியம்மா ,,

விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை:—

கண்டு வெகுநாளாச்சு என் தாயே தாயே
கைவிளக்கில் வந்தமரும்

பார்த்து வெகுநாளாச்சு என் தாயே கன்னியம்மா
பதிவிளக்கிய் வந்தமரும்

ஆரார் வரும்வேளை என் தாயே தாயே
ஆயியுட காவலிலே

## பூவாடையை அழைப்பு இரட்டைசீர்

[பூ] செத்தநாள் பூவாடை கண்டாரம்மா
சென்றொருநாள் தாயே காணவில்லை
மாண்டநாள் பூவாடை கண்டாரம்மா
மற்றொருநாள் தாயே காணவில்லை
ஆடைநல்ல தாயே கொடியிலம்மா
ஆபரணம் பூவாடை பெட்டியிலே
சேலைநல்ல தாயே கொடியிலம்மா
சிறுவானம் பூவாடை பெட்டியிலே
அரைத்தமஞ்சள் தாயே வேர்வைதட்ட
அநங்கிளியே பூவாடை வாங்களம்மா
உரைத்த மஞ்சள் தாயே வேர்வைதட்ட
உத்தமியே பூவாடை வாங்களம்மா

## முனிநாதர்பேரில் பாட்டு இரட்டைசீர்

[பூ] ஐயர் வாருர் சுவாமி ஐயர் வாருர்
ஐயர் முனிசாமி நாதர் வாருர்
சட்டை நல்ல சுவாமி நாதர் வாருர்
சந்நியாசி சுவாமி பேய்முனியா
சடையா நல்லசுவாமி சடைபாரம்
சங்கிலியோ சுவாமி தோள்பாரம்
சங்கிலியைச் சுவாமி தோளிலிட்டு
சைவ முனிசாமி வாங்களய்யா

## முடி அழைப்பு

மாயி மருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] காலாழி சப்தம் கேட்டு ஆனந்தமே
கன்னிமுடி வந்தவரே ,,
பீலாழி சப்தம் கேட்டு ,,
பின் தொடர்ந்து வந்தவரே ,,
தங்குமிட மறியேன் ,,
தணிந்திருக்குந் தாவறியேன் ,,
குந்து மிடமறியேன் ,,
குளக்கரையும் நானறியேன் ,,
எந்தவிட மறியேன் ,,
எதிராடி வாருமையா ,,
ஆவல்கொண்ட மங்கைமுடி ,,
ஆடி நல்லா வாருமையா ,,

## விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை:—

வந்தமரும் முனிசாமி என் ஐயா ஐயா
வடிவிளக்கின்மீதில் ஐயா
ஆரார் வரும்வேளை என் சுவாமி சுவாமி
ஆயியுட காவலிலே

## காட்டேரி வர்ணிப்பு

[பூ] பஞ்சயிருளன் தாயே தேவியம்மா
பதியமர்ந்த தாயே காட்டேரி
முத்திருளன் தாயே தேவியம்மா
மோகனப் பெண் தாயே காட்டேரி
மாடயிருளன் தாயே தேவியம்மா
மாதங்கி தாயே காட்டேரி
கோழிமுட்டை தாயே கண்ணழகும்

கோடாலி தாயே பல்லழகும்
குட்டி நல்ல தாயே சுவற்றடியில்
குந்திருக்கும் தாயே காட்டேரி
பாழடைந்ததாயே சுவற்றடியில்
பதுங்கியிருக்கும் தாயே காட்டேரி

### முடி அழைப்பு

மாயி மருளியரே ஆனந்தமே என்ற மெட்டு

[பூ] ஆசைமுடி தேடுமம்மா ஆனந்தமே
ஆடிவாரும் காட்டேரி ,,
முட்டைவொன்றால் பெட்டைவொன்றால் ,,
மூழ்கிவரும் சேவலொன்றும் ,,
கருப்பு புடவை வொன்றும் ,,
கண்டாங்கி ரவிக்கை வொன்றும் ,,
சிகப்பு புடவை வொன்றும் ,,
சிந்தாமணி ரவிக்கை வொன்றும் ,,
மூன்றும் மாதம் தன்கருவை ,,
முட்டையென்று தின்பவளாம் ,,
நான்காம் மாதம் தன் கருவை ,,
நலமாக உண்பவளாம் ,,

### விளக்கின் அழைப்பு

[பூ] வசன நடை:—

அமரம்மான் காட்டேரி என் தாயே தாயே
அம்பிகையாள் முன்பாக
ஆரார் வரும்வேளை—என்தாயே தாயே
ஆயுயுட காவலிலே

பூசாரிப் பாட்டுகள் முற்றிற்று.

———

வாகீஸ்வரி அச்சகம் சென்னை - 1978.

# திரிகால இரேகை சாஸ்திரம்

விலை ரூபாய் 2-00

[சக்திதாசன் எழுதியது]

விளக்கமான அநேகப் படங்கள் அடங்கிய இச் செந்தமிழ் வசன நூலறிவினால் ஆயுள் விவாக காலம், குணம், பக்தி, அதிர்ஷ்டம், சந்தானம், அறிவு, சிற்றின்பம், வியாஜ்ஜியம், சக்தி, ஐசுவரியம், கண்டம், வியாதி, அபாயம், வஞ்சகம், பேரின்பம், காரிய சித்தி, | சௌக்கியம், இல்லறசுகம், மரணம் முதலிய விஷயங்களைச் சுலபமாகத் தெரிந்துக் கொள்ளலாம். அன்றியும் இது விதியின் பலனையும், வாழ்க்கையின் இரசியங்களை வெளிப்படுத்துகிற திறவுகோலாக இருக்கிறது. உங்கள் கையிலுள்ள பலன்களைச் சுலபமாய் நீங்களே தெரிந்துக்கொள்ளலாம்.

எமது விலாசம் :—

ஆர். ஜி. பதி கம்பெனி,

34, வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை - 1.

# பாக்கெட் மலையாள

# மாந்திரீக ஆசான்

## விலை ரூ. 3-00

இக்தோர் அரிய நூல் காணக்கிடைக்காத சந்தர்ப்பம். பாக்கெட் மலையாள மாந்திரீக ஆசான்போன்ற மாந்திரீக நூலை இதுவரை பார்த்திருக்க மாட்டீர்கள். இதில் அற்புதமான மாந்திரீக உருப்படிகள் இருக்கின்றன. அரிய சந்தர்ப்பத்தைக் கைவிடாதீர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கத் தகுந்த நூல் இது.




கந்தரநுபூதியின் நூறு பாடல்களுக்கும் நூறு மாந்திரீக உருப்படிகள் உள்ளன. ஒவ்வொரு உருப்படிக்கும் சக்கரம், திருமந்திரம் ஜபிக்கும் முறை, உருவின் எண்ணிக்கை எல்லாம் கொடுக்கப்பட்டுள்ளன. மந்திரோச்சாடனம் செய்து வெற்றி பெறுக பேய் ஓட்டலாம், நோய் தீர்க்கலாம், விஷங்களை இறக்கலாம். பெண்களுக் குண்டான சகலவிதமான வியாதிகளையும் தீர்க்கலாம். செல்வம் கைகூடும்! இஷ்ட தேவதைகளை வசியப்படுத்தலாம். தன் வாழ்க்கையை இன்பமுறச் செய்வதோடு சமூகத்திற்கும் உதவலாம். நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டு அழகாகப் பைண்டு செய்யப்பட்டுள்ளது.

**எமது விலாசம் :—**

**ஆர். ஜி. பதி கம்பெனி,**

**4, வெங்கட்ராமய்ய தெரு, சென்னை - 1.**